# 2025

# කාර්යය සාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report





රජයේ කර්මාන්තශාලා දෙපාර්තමේන්තුව

அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம்

DEPARTMENT OF GOVERNMENT FACTORY

# 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்
# செலவுத் தலைப்பு இலக்கம் - 310


| உள்ளடக்கம் | | பக்க இல. |
|---|---|---|
| அத்தியாயம் 01 | நிறுவனத்தின் தோற்றப்பாடு / செயற்பாடுகளின் பொழிப்பு | 02 |
| 1.1 | அறிமுகம் | 02 |
| 1.2 | திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் | 04 |
| 1.3 | திணைக்களத்தின் பிரதான பணிகள் | 05 |
| 1.4 | தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதான உற்பத்திப் பணிகள் மற்றும் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற சேவைகள் | 06 |
| 1.5 | எமது திணைக்களத்தின் மகிழ்ச்சிகரமான சேவைபெறுநர்கள் | 08 |
| 1.6 | திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு | 09 |
| 1.7 | 2025 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் விசேட சேவைகள் | 10 |
| அத்தியாயம் 02 | முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு | 15 |
| அத்தியாயம் 03 | ஆண்டின் நிதிச் செயலாற்றுகை | 16 |
| 3.1 | நிதிச் செயலாற்றுகைக் கூற்று | 17 |
| 3.1.1 | செய்த வேலைக்கு சம்பந்தமான நிதி செயல்திறன் அறிக்கை | 21 |
| 3.2 | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை | 26 |
| 3.3 | நன்கொடைகள் மற்றும் பிற ரசீதுகள் மீதான செயல்திறன் | 26 |
| 3.4 | நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை | 26 |
| 3.5 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 27 |
| அத்தியாயம் 04 | செயலாற்றுகைச் சுட்டிகள் | 45 |
| 4.1 | திணைக்களத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்) | 45 |
| அத்தியாயம் 05 | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை | 45 |
| 5.1 | இனங்காணப்பட்ட குறித்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் | 45 |
| 5.2 | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள் | 45 |
| அத்தியாயம் 06 | மனித வளத் தோற்றப்பாடுகள் | 46 |
| 6.1 | பதவியணி முகாமைத்துவம் | 46 |
| 6.2 | நிறுவனத்தின் செயலாற்றுகைக்கான மனித வளப் பற்றாக்குறை / மிகையின் தாக்கம் | 46 |
| 6.3 | நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிப்புச் செய்யும் முறை | 47 |
| அத்தியாயம் 07 | இயைபு அறிக்கை | 49 |

## அத்தியாயம் 01 – நிறுவனத்தின் தோற்றப்பாடு / செயற்படுவதன் பொழிப்பு

### 1.1 அறிமுகம்

அரசாங்க வேலைகள் திணைக்களத்தின் உப திணைக்களமொன்றாக 1849 ஆம் ஆண்டு கொழும்பு ஐந்து லாம்புச் சந்தியதில் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் பிற்காலத்தில் அதாவது 1928 ஆம் ஆண்டு முதல் கொலன்னாவை தெமட்டகொட வீதியில் பெற்றோலியக் கூட்டுத்தாபன வளாகத்திற்கு அருகே தாபிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் பெருந்தெருக்கள், பாலம், நீர்ப்பாசனம், கட்டிடம் நிர்மாணித்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்கியுள்ளதுடன், வெளிநாட்டுப் பொறியியலாளர்களினால் இந்த நிறுவனம் வழிநடாத்தப்பட்டுள்ளது.




1969 வரை இவ்வாறு இயங்கி வந்த அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் அதன் மூலம் நிறைவேற்றியுள்ள பெருந்தெருக்களை நிர்மாணித்தல், பராமரிப்பு, கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு போன்ற சிவில் பொறியியல்சார் பணிகளுக்கு பெருந்தெருக்கள் திணைக்களம் மற்றும் கட்டிடங்கள் திணைக்களமும் இயந்திரப் பொறியியல்சார் பணிகளை நிறைவேற்றுவதற்காக "ஏ" தரத்தைச் சேர்ந்த திணைக்களமாக அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களமும் 1971.01.10 ஆம் திகதி தாபிக்கப்பட்டன.




**பொல்கொட பாலத்தின் பக்கத் தோற்றம் 1938 சனவரி 20**




**பொல்கொட பாலத்தின் முன்பக்கத் தோற்றம் 1938 சனவரி 20**

அன்று முதல் பல்வேறு அரச நிறுவனங்களை வழிநடாத்துவதற்குத் தேவையான இயந்திரப் பொறியியல்சார் உதவிச் சேவைகளை வழங்குவதற்கு அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் பொதுத் திறைசேரியின் முற்பணக் கணக்கு முறையின் கீழ் பேணிவரப்படுகின்றது.

காலத்திற்கு இசைவாக அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் காணிகள் மற்றும் காணிகள் அபிவிருத்தி அமைச்சு, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் பொது வசதிகள் அமைச்சு, வீடமைப்பு. நிர்மாணத்துறை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, வீடமைப்பு.

நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் தற்போது கிராமிய, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் தொடர்ச்சியாக இயங்கிவந்துள்ளது.

இதற்கு மேலதிகமாக குடிநீர் பெற்றுக் கொடுப்பதற்காக நிரப்பு தொட்டிகள் உருவாக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் நீர் முகாமைத்துவ கதவுகளை நிர்மாணித்துப் பொருத்தும் சந்தையில் முன்னுரிமை அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்திற்கு உரித்தாகியுள்ளது. அண்மைக் காலத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பூர்த்தி செய்யப்பட்ட பல பாரியளவிலான நீர்க் கருத்திட்டங்களின் நீர்க் கட்டுப்பாட்டு கதவுகள் அனைத்தும் நிர்மாணித்துப் பொருத்தப்பட்டிருப்பது அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தினால் ஆகும். வெஹெரகல, தெதுறு ஓயா, பே ஆறு மற்றும் ரம்புக்கன் ஓயா நீர்த்தேக்க கருத்திட்டங்கள் இவற்றில் சிலவாகும்.

அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தினால் இயந்திரப் பொறியியல் துறையில் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் சேவைகள் நிறைவேற்றப்படுவது திறைசேரியின் மேற்கொண்ட வேலைகள் முற்பணம் மற்றும் களஞ்சிய முற்பணக் கணக்கு முறையின் கீழாகும் என்பதனால் இந்தத் திணைக்களத்தை அரச துறையின் வர்த்தக நடவடிக்கைகளை வழிநடாத்துகின்ற விசேட திணைக்களமொன்றாக அறிமுகம் செய்ய முடியும்.

உற்பத்தி மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு ஈடுபடுத்தப்படுகின்ற திணைக்களம்சார் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்துவதற்கு மாதாந்தம் ரூ.மி. 12 ஆன தொகையை வாடிக்கையாளர்களிடமிருந்து உழைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு திறைசேரி நிதி வழங்குவதில்லை.

2013 இல், அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம் இலங்கை தேசிய தரக் கொள்கையின்படி ISO 9001:2008 சர்வதேச தர அமைப்பு சான்றிதழை வென்றெடுக்க முடிந்தது. இந்தச் சான்றிதழைப் பெறுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மூலம், அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் செயல்திறனை அதிகரிக்க முடிந்தது மற்றும் 2025 ஆம் ஆண்டில், ISO 9001:2015 சர்வதேச தர அமைப்புச் சான்றிதழ் 2026 க்கு புதுப்பிக்கப்பட்டது. இது தவிர, CIDA நிறுவனத்தின் கட்டுமானத்திற்காக EMI (ஹெவி ஸ்டீல் ஃபேப்ரிகேஷன்). EMF (எலிவேட்டர்கள், எஸ்கலேட்டர்கள் & வெளிப்படுத்துபவர்கள்) புதுப்பிக்கப்பட்டது. SP2 கார்பென்ட்ரி & ஜாய்னரி) 2026 வரை புதுப்பிக்கப்பட்டது. TVEC இன் கீழ் ஒட்டுதல் மற்றும் வார்ப்பு தொழில்நுட்பப் படிப்புகளுக்கா பதிவு செய்யப்பட்டது.இது எங்கள் வாடிக்கையாளர் சேவைகளை அதிகரிக்க உதவியது.



தோப்புவ பாலம் 1938 அக்டோபர் 24



வெல்லவத்த பாலம் 1939 ஆகஸ்ட் 03

## 1.2 திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

### நோக்கு

உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப மிக உயர்ந்த தரத்திற்கு உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்த வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்துதல்

### செயற்பணி

“வர்த்தகர்கள்இ தொழில்நுட்ப வல்லுநர்கள்இ இளங்கலைப் பட்டதாரிகள்இ கைவினைப் பயிற்சியாளர்கள் மற்றும் இயந்திர பொறியியலாளர்களுக்கு இயந்திர பொறியியல் தயாரிப்புகள்இ வேலைகள்இ சேவைகள்இ தீர்வுகள் மற்றும் பட்டறை பயிற்சிகளை வழங்குதல்.”

## 1.3 திணைக்களத்தின் பிரதான பணிகள்

# அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்

**(அ) உற்பத்தித் துறை**

**அரச மற்றும் தனியார் துறைக்கு உலோக மற்றும் பலகை மூலமான தளபாட உற்பத்திகள்**

1. நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ உபகரணங்கள், வைத்தியசாலை உபகரணம் உற்பத்தி
2. தளபாட உற்பத்திகள்
3. சீனச்சட்டி மற்றும் நிபெரஸ் வார்ப்பு உற்பத்திகள்
4. பொலிஸ் திணைக்களத்திற்கு உத்தியோகபூர்வ பட்டி, நட்சத்திரம், இலக்கத் தகடுகளை உற்பத்தி செய்தல்.
5. தபால் திணைக்களம் மற்றும் வேறு திணைக்களங்களுக்குத் தேவையான தினக் குற்றிகள், ஆண்டுக் குற்றிகளை உற்பத்தி செய்தல்.
6. பெயர்ப் பலகைகள்

**(ஆ) நிர்மாணத் துறை (கனரக காய்ச்சி ஒட்டுதல்)**

1. நீர்ப்பாசன கதவுகள் மற்றும் நீர்த்தேக்கங்களுக்கு பல்வேறு வகையிலான கதவுகள் மற்றும் அம்சங்களை வடிவமைத்தல், உற்பத்தி மற்றும் பொருத்தல்.
2. தொல்பொருள் ரீதியில் முக்கியமான விஹாரைகள் மற்றும் மற்றும் புத்தர் சிலைகளுக்கான பாதுகாப்பு வேலி மற்றும் பாதுகாப்புக்கான கூரைகளை நிர்மாணித்தல்
3. உலோக சட்டகங்களைக் கொண்ட கட்டிடங்களை நிர்மாணித்தல்.
4. கட்டிடங்களில் பலகை மற்றும் உலோக கூரைகளை நிர்மாணித்தல்
5. வைபவங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளின் தலைவர்கள், விசேட அதிதிகளுக்கான விசேட மேற்புற கூரைகள், மேடைகள், கூடங்களை ஏற்பாடு செய்தல்.
6. இரும்புப் பாலம்
7. நீர்ச் சுத்திகரிப்பு தாங்கிகள்

**(இ) புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புத் துறை**

1. வைத்தியசாலைகள் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள், இலகு கைத்தொழில் நிறுவனங்களின்இயந்திரங்கள், உபகரணங்களை புதுப்பித்தல்
2. நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்களின் நீர் முகாமைத்துவ அணைக்கட்டுக்களினதும், நீர்த்தேக்கங்களின் கதவுகள் மற்றும் அம்சங்களை புதுப்பித்தல்
3. அலுவலகங்களின் தளபாடங்களை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்.
4. தட்டச்சு இயந்திரம் மற்றும் வளிச்சீராக்கி இயந்திரம் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல்
5. அரச நிறுவனங்களின் வாகனங்களை சேர்விஸ் செய்தல்.

**(ஈ) இயந்திரப் பொறியியல் மதியுரைச் சேவைகள்**

1. பொறியியல் பட்டப் பின் படிப்பு, பொறியியல் பட்டப் படிப்பை மேற்கொள்வோர், பல்வேறு பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களுக்கு பயிற்சிளித்தல்.
2. அரச நிறுவனங்களின் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களுக்கான அறிக்கைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
3. அரச நிறுவனங்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் தொழில்நுட்ப துறைசார் உறுப்பினர்களாக பங்கேற்றல்.
4. இயந்திரப் பொறியியல் உற்பத்திகள் மற்றும் சேவைகள் மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல்

## 1.4 தற்போது மேற்கொள்ளப்படுகின்ற பிரதான உற்பத்திப் பணிகளும் ஆற்றப்படுகின்ற சேவைகளும்

| இல. | நிறுவனம் | ஆற்றப்படும் சேவைகள் |
|---|---|---|
| 01. | நீர்ப்பாசனத் திணைக்களம் | நீர் வெளியேற்றும் கதவுகள், ஏனைய சீனச்சட்டி, பலகை மூலமான மற்றும் இரும்பு நீர்க் குழாய்கள், நீர்க் கதவுகள் மற்றும் நீர்க் கட்டுப்பாட்டு அம்சங்களை வடிவமைத்தல் மற்றும் பொருத்தல் |
| 02. | வைத்தியசாலை | வைத்தியசாலை பவுடர் கோடிங் செய்யப்பட்ட மற்றும் உருக்கு மூலம் தயாரிக்கப்பட்ட வைத்தியசாலை தளபாட உபகரணங்கள் |
| 03. | பொலிஸ் திணைக்களம் / பாதுகாப்பு அமைச்சு | உத்தியோகபூர்வ பட்டிகள், பெயர்ப் பலகைகள், இயந்திர சைரன், உத்தியோகபூர்வ இலக்கத் தகடுகள் |
| 04. | தபால் திணைக்களம் | ஆண்டு, மாதம், நாள் தாதுக்களை கொண்ட தபால் முத்திரை, வீட்டு உபகரணம் மற்றும் கருவிகளை உற்பத்தி செய்தல் மற்றும் இரும்பு சம்பந்தமான உற்பத்திகள் |
| 05. | புகையிரத திணைக்களம் | உருக்கி ஒட்டுதல், இரும்புசார்ந்த உற்பத்திகள் |
| 06. | புனர்வாழ்வு / ஆயுர்வேத வைத்தியசாலை | இயந்திர சாதனங்களைப் பொருத்துதல் மற்றும் பராமரிப்பு |
| 07. | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | வீதித் தடைகள் மற்றும் வீதிச் சமிஞ்சைப் பலகைகள், மேன்ஹோல்(ஆள்துளை) மற்றும் மூடிகள், இரும்புப் பாலம் |
| 08 | நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்களை நிர்மாணித்தல் / பொருத்தல் / புதுப்பித்தல் |
| 09. | தேர்தல்கள் திணைக்களம் | வாக்குப் பெட்டி உற்பத்தி, வீட்டு உபகரணம் வழங்குதல் |
| 10. | மோட்டார் போக்குரவத்து திணைக்களம் | அறைகளை ஒதுக்குதல், கூரைகளை புதுப்பித்தல், செசி இலக்கம் மற்றும் என்ஜின் இலக்கம் அச்சிடல் |
| 11 | சகல அரச நிறுவனங்களும் | தளபாடம் மற்றும் ஏனைய மர உற்பத்திகள் |
| 12. | சகல அரச நிறுவனங்கள் / தனியார் நிறுவனங்கள் | ஸ்கிறீன் அச்சு, டிஜிட்டல் அச்சு, அறிவித்தல் பலகைகள், மர அலங்கார வேலைகள் |
| | | எம்போஸ் வேலைகள், அரச இலட்சினை |
| | | கதவுகள், ஜன்னல்களை உற்பத்தி செய்தல், சகல வகையிலுமான பார்டிஷன்கள் (அறைகளை ஒதுக்கும் வேலைகள்) (அலுமினியம் மற்றும் பலகை மூலமானது) |

| | | |
|---|---|---|
| | | வெட்டுதல், துளையிடல், சுற்றுதல் போன்ற பல்வேறு காய்ச்சியொட்டும் வேலைகளும், கொல்லர் வேலைகள், சகல இயந்திரசாதன வேலைகள் Planing, CNC, Milling |
| | | பாரிய தயார் செய்தல் வேலைகள், இலகுரக தயார் செய்தல் வேலைகள் மற்றும் கொல்லர் வேலைகள் மற்றும் அலுமினியம் தயார்படுத்தல் வேலைகள் |
| | | மின் உபகரண வேலைகள், Control Panel Board வடிவமைத்தல், மின் உபகரணம் பொருத்தல் மற்றும் புதுப்பித்தல் |
| | | இலக்ட்ரோ பிளேட்டிங்க் வேலைகள் |
| 13 | பட்டயம் பெற்ற பொறியியலாளராக கல்வி பயிலுவோர். பொறியியல் பட்டத்தை கற்பவர்கள், தொழில்நுட்ப நிறுவனங்களின் பயிலுனர்கள் | இயந்திரசாதன பொறியியல் துறையில் செயன்முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல் |

## 1.5 எமது திணைக்களத்தின் திருப்திகரமான சேவைபெறுவோர்

| இல. | நிறுவனம் | வழங்கப்படும் சேவைகள் |
|---|---|---|
| 01 | விளையாட்டுத்துறை அமைச்சு | பலகையினாலான கதவுச் சட்டகம், மற்றும் கதவுகள், யன்னல்களை உற்பத்தி செய்தல். |
| 02 | திறைசேரி | பலகையினாலான கதவுச் சட்டகம், மற்றும் கதவுகள், யன்னல்களை உற்பத்தி செய்தல். |
| 03 | தேர்தல்கள் திணைக்களம் | வாக்குப்பெட்டி உற்பத்தி, புதுப்பித்தல் மற்றும் பெயர்ப் பலகைகளை தயார் செய்தல் |
| 04 | கபூர் கட்டிடம் - கொழும்பு 01 | பலகையினாலான கதவுச் சட்டகம், மற்றும் கதவுகள், யன்னல்களை உற்பத்தி செய்தல். |
| 05 | சனாதிபதி மாளிகை (அநுராதபுரம், நுவரெலியா) | பலகையினாலான கதவுச் சட்டகம், மற்றும் கதவுகள், யன்னல்களை உற்பத்தி செய்தல். |
| 06 | நீர்ப்பாசனத் திணைக்களம் | நீர்க் கட்டுப்பாட்டு கதவுகள் மற்றும் அம்சங்களை வடிவமைத்தல், உற்பத்தி, பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல். |
| 07 | அரச வைத்தியசாலை | சகல வகையிலுமான வைத்தியசாலை தளபாடம், உபகரணம் (இரும்பு மற்றும் உருக்கு) உற்பத்திகள் பவுடர் கோட்டின் செய்தல் மற்றும் புதுப்பித்தல்கள் |
| 08 | பொலிஸ் திணைக்களம் | உத்தியோகபூர்வ பட்டிகள், வீட்டுத் தளபாடம், தட்டுப் படுக்கைகள் (பலகை மற்றும் இரும்பு) |
| 09 | தபால் திணைக்களம் | ஆண்டு, மாதம், நாள் தாதுக்களை கொண்ட தபால் முத்திரை, வீட்டு உபகரணம் மற்றும் கருவிகளை உற்பத்தி செய்தல் மற்றும் இரும்பு சம்பந்தமான உற்பத்திகள் |
| 10 | நீதி அமைச்சு | தளபாடம், ஆவணக்காப்பக ராக்கில்கள், பெயர்ப் பலகைகள் |
| 11 | தொல்பொருளியல் திணைக்களம் / மத்திய கலாசார நிதியம் | தொல்பொருட்ககளுக்கு இரும்பினாலான கூரையை வடிவமைத்தல், நிர்மாணித்தல், பொருத்தல், பெயர்ப் பலகைகள், அருங்காட்சிச்சாலை தளபாடம் உற்பத்தி, தெரு விளக்குகளுக்கான கம்பங்களை நிர்மாணித்து பொருத்தல் |
| 12 | புகையிரத திணைக்களம் | பிறேக் பகுதிகள் மற்றும் புகையிரத சமிஞ்சைகளுக்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள் |
| 13 | வெளிவிவகார அமைச்சு | இரும்பு மற்றும் பலகை சம்பந்தமான பொருட்கள், உபகரணங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் புதுப்பித்தல் |
| 14 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை / மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | இரும்புப் பாலங்களை நிர்மாணித்தல் மற்றும் பொருத்தல், பெயர்ப் பலகைகளை நிர்மாணித்தல். |
| 15 | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை | நீர்ச் சுத்திகரிப்பு தாங்கிகளை வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் பொருத்தல். |

## 1.6 நிறுவன ஒழுங்கமைப்பு




| | | | | | |
|---|---|---|---|---|---|
| சி.இ.அ. | - சிரேஷ்ட இயந்திர அத்தியட்சகர் | பி.வ.க. | - பிரதம வடிவமைப்புக் கலைஞர் | சி.இ.அ.தி. | - சிரேஷ்ட இயந்திர அத்தியட்சகர் (திட்டமிடல்) |
| அ.அ. | - அபிவிருத்தி அலுவலர் | சி.இ.அ.பா. | - சிரேஷ்ட இயந்திர அதித்தியட்சகர் (பாதுகாப்பு) | இ.அ. | - இயந்திர அத்தியட்சகர் |
| நே.க.இ. | - நேரக் கணிப்பு அலுவலர் | நி.அ. | - நிருவாக அலுவலர் | வே.மே. | - வேலை மேற்பார்வையாளர் |
| க.அ.உ. | - கனிய அளவை உதவியாளர் | வே.இ. | - வேலைத்தள உதவியாளர் | வ.செ.தி.உ. | - வரவு செலவுத்திட்ட உதவியாளர் |
| மு.சே.அ. | - முகாமைத்துவ சேவைகள் அலுவலர் | ப.க. | - பகுதியளவிலான கலைஞர் | ந.அ. | - நலன்புரி அலுவலர் |
| அ.சி. | - அலுவலக சிற்றூழியர் | வே.த.உ. | - வேலைத்தள உதவியாளர் | த.தொ.தொ. | - அதகவல் தொடர்பாடல் தொழல்நுட்ப அலுவலர் |

1.7 **2025 ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு) மேற்கொண்ட வேலை முற்பணம்**

| | **கருத்திட்ட விபரம்** | **இலக்கு 2025** | | **முன்னேற்றம் 2025.12.31 திகதிக்கு** | |
|---|---|---|---|---|---|
| | | **மதிப்பீடு (ரூ.மி.)** | **பௌதீக (%)** | **மதிப்பீடு (ரூ.மி.)** | **பௌதீக (%)** |
| 1 | ஊவா குடாஓயா – உமா ஓயா கருத்திட்டத்தின் ரேடியல் கதவு இலக்கம் 02 இற்கு ஹைட்ரோலிக் மேல் உயர்த்தும் இயந்திரத்தை தயார் செய்வதும், தாபிப்பதும் | 105 | 100 | 19.26 | 93 |
| 2 | 2025 தேசிய சுதந்திர தினக்கொண்டாட்டத்துக்கான VVIP, VIP மேடையை தயார் செய்தல், பொருத்தல் மற்றும் கொண்டுசெல்லல் | 25 | 100 | 22.73 | 100 |
| 3 | எல்லேவெவ வர்ப்பு இரும்பு அணைக்கட்டுக் கதவு, அவசர கதவை தயார் செய்தல், வழங்கல் மற்றும் தாபித்தல் | 15 | 100 | 8.15 | 40 |
| 4 | ஹபுகல நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் பெகேஜ் முறையில் நீர் சுத்திகரிப்புச் செய்வதை நிர்மாணித்தல் | 80 | 100 | | 5 |
| 5 | திஸ்ஸமஹாராமயில் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை புனரமைப்புச் செய்தல் | 28 | 100 | 5.83 | 65 |
| 6 | இயந்திரசாதன அலகு (வேலைத்தளம் 01) - இயந்திரசாதனம், தனியார் மற்றும் அரச துறை வேலைகள் | 6 | 100 | 14.08 | 100 |
| 7 | கனரக வெல்டின் அலகினால் நிறைவேற்றப்படும் ஏனைய பணிகள் (வேலைத்தலம் 02) | 10 | 100 | 53.29 | 100 |
| 8 | தச்சுத் தொழில் அலகு (வேலைத்தலம் 03) (அரச மற்றும் தனியார் துறைக்கு பலகை மூலமான தளபாடம் உற்பத்தி) | 15 | 100 | 4.05 | 37 |
| 9 | இலகுரக உற்பத்தி அலகு (வேலைத்தலம் 04) வைத்தியசாலை தளபாடம் உற்பத்தி மற்றும் பராமரிப்பு | 15 | 100 | 43.67 | 100 |
| 10 | வார்ப்பு அலகு (வேலைத்தலம் 06) அரச மற்றும் தனியார் துறைக்கான இரும்பு மற்றும் இரும்பு அல்லாத அம்சங்களின் வார்ப்பு நடவடிக்கைகள் | 25 | 100 | 25.97 | 100 |
| 11 | இலகு பொறியியல் அலகு (வேலைத்தலம் 07) அரச மற்றும் தனியார் துஜறக்கான இலகு பொறியியல் நடவடிக்கைகள் | 20 | 100 | 25.98 | 100 |
| 12 | புதுப்பித்தல் /பராரிப்பு அலகு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் (வேலைத்தலம் 14 மற்றும் வேலைத்தலம் 16) | 6 | 100 | 6.95 | 100 |
| | **முழு மொத்தம்** | **350** | 100 | **229.96** | **70** |

**2025 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள் சில பின்வருமாறாகும்.**

01) அலுத்திவுல்வெவ நீர்த்தேக்கத்தில் தாபிப்பதற்காக எமது வார்ப்பு அலகு மற்றும் இயந்திரசாதனப் பிரிவினால் உற்பத்தி செய்யப்பட்ட கனஉலோக(Cast Iron) நீர்க்கதவு, அவசர கதவு மற்றும் உரிய அம்சங்களை வடிவமைத்து உற்பத்தி செய்தல் மற்றும் பொருத்துவதற்காக அனுப்பிவைத்தல்



02) இலங்கையில் பல்கலைக்கழகங்களுடன் நாம் மேற்கொண்ட வருகின்ற கைத்தொழில் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அம்சமாக களனி பல்கலைக்கழகத்தில் கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்கு CNC இயந்திரம் பற்றிய செயன்முறை அமர்வு ஒழுங்கு செய்யப்பட்டமை மற்றும் உள்ளூர் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல்.



03) கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து Ductile iron உற்பத்தி பற்றிய செயன்முறைப் பயிற்சி அமர்வை நடாத்தியதன் மூலம் Ductile iron உற்பத்தியிலும் ஈடுபடுதல்.



04) கராப்பிட்டிய வைத்தியசாலை உள்ளிட்ட வைத்தியசாலைகளுக்கு வைத்தியசாலை உபகரணங்களை உற்பத்தி செய்தல்.



05) கிரிஉல்ல பாலத்தை புதுப்பித்தல்



06) இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு புகையிரத உதிரிபாகங்களை உற்பத்தி செய்தல்



## புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்

எமது உற்பத்திச் செயன்முறையை நவீனமயப்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட மின்சார லேசர் வேல்டின் இயந்திரம், 3D அச்சு இயந்திரம் மற்றும் நவீன இன்டக்சன் அடுப்பை - Induction Furnace பயன்படுத்திக் கொள்ளல்.




3D அச்சு இயந்திரம்




மின்சார லேசர் வேல்டின் இயந்திரம்



Jolt squeeze molding machine

## 02 அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

### 2025 ஆம் ஆண்டு கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது பெற்றுக் கொண்ட வெற்றிகள், எதிர்கொண்ட சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

### விசேட வெற்றிகள்

* "A Novel, Movable, Safer Chopping Machine to Produce Compost" எனும் புதிய உற்பத்திக்கான பேடன்ட் உரிமப் பெற்றுக் கொள்ளல்.
* 2025 ஆண்டில் ISO 9001:2015 சர்வதேச தரச்சான்றிதழ் இற்றைப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக CIDA நிறுவனத்தின் நிர்மாணிப்புக்கான EMI (Heavy Steel Fabrication) 2025 ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது. EMF (Elevators, Escalators & Revelators) 2025 ஆண்டு புதுப்பிக்கப்பட்டது. SP2 Carpentry & Joinery) 2025 ஆண்டு புதுப்பிக்கப்பட்டது.
* தனியார் நிறுவனங்களுடன் போட்டியிட்டு நீர்க்கட்டுப்பாட்டு கதவுகளை குறைந்த விலைகளின் கீழ் நிர்மாணித்துப் பொருத்த முடிந்தமை.
* பாரம்பரிய உற்பத்தி இயந்திரங்களுக்குப் பதிலாக நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்து வினைத்திறனும், உயர் தரமும் கொண்ட பொருட்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொண்டமை.
* குறிப்பாக இலங்கை புகையிரத திணைக்களத்திடம் போட்டித்தன்மைமிக்க பல கேள்விகளை வென்றெடுக்க முடிந்தமை.
* ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் பயிற்சி அலகு மூலம் பொது மக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமை.

### சவால்கள்

* தொழில்நுட்ப மற்றும் அலுவலக பதவியணியில் தொடர்ச்சியாக வெற்றிடம் நிலவுதல், ஓய்வு பெறல் மற்றும் வெளிநாடு செல்லும் ஊழியர்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்வது சவாலாக உள்ள பின்னணியில் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆற்றல்கள் கைவிட்டுச் செல்லல்.
* பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்கு அரச நிறுவனங்களிடம் கிடைக்க வேண்டியுள்ள நிதி உரிய காலப்பகுதிக்குள் கிடைக்காமை.
* அரச கொள்கையின் அடிப்படையில் பெறுகைச் செயன்முறைக்கு இசைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்படுவதன் பேரில் தனியார் நிறுவனங்களுடன் போட்டித்தன்மைமிக்கவாறு கருத்திட்டங்களை அமுல்படுத்தச் செல்வது கடினமாதல்.
* அரச துறையில் காணப்பட வேண்டிய அத்தியாவசிய தொழில்நுட்ப ஆற்றல்களைப் பேணிவருவதுடன் நீர்ப்பாசன நிர்மாணிப்புத் துறைக்குத் தேவையான தொழில்நுட்ப வகைப்படுத்தல், வடிவமைப்புக்கள் உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட போதும் மேற்படி தகவல்களைப் பயன்படுத்தி குறித்த நிறுவனங்கள் பெறுகை செயன்முறை ஊடாக வழங்குனர்களை தேடிப்பெற்றுக் கொள்ள முயற்சித்தல். இதன் காரணமாக குறித்த திறமைகளைப் பேணிவருவது சவாலாக உள்ளதுடன், அதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான சேவைகளை வழங்குவதில் சிக்கல் எழுவதற்கான அபாயம் நிலவுகின்றது.
* செயலாற்றுகை பிணை, விலைமனுப் பிணை மற்றும் வேறு பிணைகளை சமர்ப்பிப்பது கடினமாதல்.

### எதிர்கால இலக்குகள்

* தற்போது கட்டளை கிடைத்து கைவிட்டுச் சென்றுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டளை, வைத்தியசாலை தளபாடக் கட்டளை, பொலிஸ், தபால் திணைக்களங்களின் கட்டளைகளை மீண்டும் பெற்றுக் கொள்ள கலந்துரையாடல்.
* பெருந்தெருக்கள் தொடர்பான கருத்திட்டங்களுக்குத் தேவையான கருவிகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யாது உள்நாட்டில் உற்பத்தி செய்துகொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* பொது மக்களுக்குத் தேவையான இயந்திரசாதன மற்றும் பலகைமூலமான பணிகளின் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான முறையியலை ஏற்படுத்தல்.
* நாட்டின் இன்றைய தேவைகளுக்கமைய பயிற்சியளிக்கும் நிறுவனமொன்றை தாபித்தல்.
* உற்பத்திக் கொள்ளளவை மேம்படுத்திக் கொள்வதற்காக தனியார் துறையினரை தொடர்புபடுத்திக் கொள்ள செயற்படுதல்.

**03- ஆண்டின் நிதி செயல்திறன்**

**3.1 பொதுநிலைக்கணக்கு விதிகளின் கீழ் நிதிசார்பு செயல்திறன் அறிக்கை**

**3.1.1 செய்த வேலைக்கு சம்பந்தமான நிதி செயல்திறன் அறிக்கை**

**3.2 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் பயன்பாடு செயல்திறன்**

**3.3 நன்கொடைகள் மற்றும் பிற ரசீதுகள் மீதான செயல்திறன்**

**3.4 நிதி சாராத சொத்துக்கள் செயல்திறனைப் புகாரளிக்கின்றன**

**3.5 ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை**

## 3 ஆண்டின் நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

எசீஎ- எப்

2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று
அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | | - | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | - | - | |
| - | வருமானமற்ற பெறுகைகள் | | | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 306,167,186 | 338,687,744 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 47,126,655 | 46,074,944 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 565,831,569 | 510,897,796 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 919,125,410 | 895,660,485 | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ) | | 919,125,410 | 895,660,485 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | 60,100,814 | 136,713,966 | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ) | | 859,024,596 | 758,946,519 | |
| | கழி : செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | | | |
| 100,500,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 96,909,972 | 88,820,886 | |
| 77,000,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 65,321,546 | 61,858,082 | ஏசீஏ-2(ii) |
| 1,000,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 647,541 | 884,682 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| 36,000,000 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 35,165,055 | 2,016,780 | |
| 214,500,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | 198,044,114 | 153,580,430 | |
| | மூலதனம் செலவினம் | | | | |
| 38,000,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 28,410,077 | 36,300,000 | |
| 33,500,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 33,154,412 | 44,947,644 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 2,000,000 | திறன் விருத்தி | 14 | 1,623,266 | 1,466,693 | |
| 2,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 2,000,000 | 797,866 | |
| 75,500,000 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | 65,187,755 | 83,512,202 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 46,654,567 | 37,638,908 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 520,609,054 | 434,644,445 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | - | |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 567,263,621 | 472,283,354 | |
| | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | | 830,495,490 | 709,375,986 | |
| | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ) | | 28,529,106 | 49,570,533 | |
| | பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி | | 28,529,106 | 49,553,403 | ஏசீஏ-7 |
| - | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | | 17,130 | ஏசீஏ-3 |

01

ஏசீஏ -பீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று
அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 1,087,329,884 | 1,054,175,497 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | (331,085,678) | (285,863,163) |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | 0 | 17,130 |
| மொத்த சொத்துக்கள் | | 756,244,206 | 768,329,464 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | (363,031,088) | (317,336,486) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,087,329,884 | 1,054,175,497 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | - | - |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 31,945,410 | 31,473,323 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 0 | 17,130 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 756,244,206 | 768,329,464 |

பக்க இலக்கம 06 முதல் 27 வரை ஏசீஏ 02 முதல் 07 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்.'. பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 06 முதல் 27 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 ஆம் ஆண்டின் 17.'.12.'.2025 திகதியிடப்பட்ட இல 02.'.2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்:Eng.L.B.Kumudu Lal | பெயர்: Eng.A.Wijesinghe | பெயர் :W.H.C.Himali |
| பதவி : Secretary | பதவி : Director General | |
| திகதி :2026.02. 27 | திகதி :2026.02. 26 | திகதி : 2026.02. 29 |

Eng. A. Wijesinghe
Director General
Department of Government Factory
Kolonnawa

02

## 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2025 ரூபா | 2024 ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 63,950,987 | 35,147,211 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 306,167,186 | 338,687,744 |
| முற்பணங்களை அறவிடல் | 565,729,312 | 510,493,270 |
| வைப்புக்களின் பெறுகை | 47,126,655 | 46,074,944 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **982,974,140** | **930,403,170** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 196,608,898 | 151,401,573 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 647,541 | 884,682 |
| முலதனச் சொத்துக்களின் புனரமைப்பு முலதன மாற்றங்கள் திறன் வளர்ப்பு மற்றும் பிற முலதனச் செலவினங்கள் | 32,033,343 | |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 75,162,712 | 85,678,131 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 60,100,813 | 136,713,966 |
| முற்பணக் கொடுப்பனவு | 520,609,054 | 434,556,577 |
| வைப்புக் கொடுப்பனவு | 46,654,567 | 37,638,908 |
| வருவாயிலிருந்து பணத்தை மீள் பெறுதல் | 18,002,800 | |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **949,819,728** | **846,873,838** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **33,154,412** | **83,529,332** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| முலதனச் சொத்துக்களின் நிர்மாணம் கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள் | | 83,512,202 |
| முலதனச் சொத்துக்களின் நிர்மாணம் கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள் | 33,154,412 | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **33,154,412** | **83,512,202** |
| | (33,154,412) | (83,512,202) |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-** | | |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)ஸ்ரீ(இ)** | 0 | **17,130** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | - | **17,130** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | **17,130** |

03

பின்னிணைப்பு-(i)

# நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்று

(நி.ஒ. 106 மற்றும் நி.ஒ 113 இன் கீழான நட்டம்)

அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்

செலவினத் தலைப்பு இல: 310
நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 2

(i) வருடத்தினுள் நட்டத்தை அறவிடுதல்/ வெட்டி நீக்குதல் / கைவிடுதல் பற்றிய கூற்றுக்கள்

| | | நிகழ்வுகளின் எண்ணிக்கை | முழு மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| பெறுமதி | கீழ் | | |
| ரூபா 25,000.00 | மேல் | | - |
| ரூபா 25,000.01 | | | |
| மொத்தம் | | | - |

| நட்டத்தின் தன்மையின் பிரகாரம் நிகழ்வுகளி வகை | நிகழ்வுகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| மொத்தம் | | |

(ii) தொடர்ந்தும் அறவிடுவதற்கு அல்லது வெட்டி நீக்குவதற்கு அல்லது கைவிடுவதற்கு இருக்கின்ற நட்டம் பற்றிய கூற்று

| | | நிகழ்வுகளின் எண்ணிக்கை | முழு மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| பெறுமதி | கீழ் | | |
| ரூபா 25,000.00 | மேல் | 1 | 20,050.00 |
| ரூபா 25,000.01 | | 8 | 1,066,488.27 |
| மொத்தம் | | | 1,086,538.27 |

(ii) பிரகாரம் காலப் பகுப்பாய்வு

| | | |
|---|---|---|
| 5 வருடத்திற்குக் கீழ் | நிகழ்வுகளின் எ | 9 |
| | தொகை | 1,086,538.27 |
| 5-10 வருடங்கள் | நிகழ்வுகளின் எண்ணிக்கை | |
| | தொகை | 0.00 |
| 10 வருடத்திற்கு மேல் | நிகழ்வுகளின் எண்ணிக்கை | |
| | தொகை | 0.00 |

| நட்டத்தின் தன்மையின் பிரகாரம் நிகழ்வுகளின் வகை | | நிகழ்வுகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 1 | வாகன விபத்துக்கள் | 7 | 708,946.00 |
| 2 | மற்றவை | 2 | 377,592.27 |
| 3 | | | |
| மொத்தம் | | | 1,086,538.27 |

குறிப்பு - செலவினத் தலைப்பு 1701 இன் கீழ் வருடத்தினுள் கணக்கு வைக்கப்பட்ட அல்லது முன்வரும் வருடங்களில் கணக்கு வைக்கவிருக்கின்ற நி.ஒ. 106 இன் கீழிருக்கின்ற தீங்கு மற்றும் நி.ஒ. 113 இன் கீழான கைவிடுதல் பற்றிய விபரத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

* அறிக்கையிடும் நிறுவனங்களில் இந்த அறிக்கைகள் தொடர்பான தகவல்கள் இல்லை என்றால் இல்லை என அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி : 2026.02.

NATIONAL AUDIT OFFICE

32

### 3.1.1 செய்த வேலை சம்பந்தமான நிதி செயல்திறன் அறிக்கை

**அரசாங்க தொழிற்சாலை – கொலன்னாவ**

**வேலை நிறைவேற்றல் முன்பணக் கணக்கு – 2025**

**2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயல்திறன் அறிக்கை**

| | Note | 2025 | 2024 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| வருவாய் | 1 | 265,080,150.04 | 301,100,475.16 |
| | | | |
| உற்பத்தி மற்றும் மேல்நிலைச் செலவுகள் | 2 | (209,542,432.90) | (273,258,377.82) |
| | | | |
| மொத்த இலாபம் | | **55,537,717.14** | **27,842,097.34** |
| | | | |
| பிற வருமானம் | 4 | 795,372.27 | 101,278.82 |
| | | | |
| நிர்வாகச் செலவுகள் | 3 | (35,478,239.38) | (14,764,104.92) |
| | | | |
| | | | |
| ஆண்டிற்கான நிகர இலாபம் | | **20,854,850.03** | **13,179,271.24** |

## அரசாங்க தொழிற்சாலை – கொலன்னாவ
## வேலை நிறைவேற்றல் முன்பணக் கணக்கு – 2025
## 2025 டிசம்பர் 31 நிலைப்பட்ட நிதிப் பொருளாதார நிலை அறிக்கை

| | குறிப்பு | செலவுமதிப்பு | திரட்டப்பட்ட மதிப்பிழப்பு | 2025 ரூ. நிகர மதிப்பு | 2024 ரூ. நிகர மதிப்பு |
|---|---|---|---|---|---|
| சொத்துகள் | | | | | |
| நடப்பு அல்லாத சொத்துகள் | | | | | |
| புதிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 5 | 360,828,819.75 | 28,670,817.79 | 332,158,001.96 | 325,623,943.23 |
| மோட்டார் வாகனங்கள் | 6 | 70,847,359.61 | 7,576,583.97 | 63,270,775.64 | 63,270,775.64 |
| அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 7 | 11,584,620.38 | 6,901,499.35 | 4,683,121.03 | 4,344,588.59 |
| | | 443,260,799.74 | 43,148,901.11 | 400,111,898.63 | 393,239,307.46 |
| | | | | - | - |
| நடப்பு சொத்துகள் | | | | | |
| 31.12.2025 அன்று இருப்பு கையிருப்பு | 8 | | | 80,131,685.07 | 47,476,674.25 |
| பெற வேண்டியவர்கள் | 9 | | | 608,966,406.02 | 574,183,874.63 |
| களஞ்சிய முன்பணக் கணக்கு | | | | 27,502,220.59 | 17,812,118.44 |
| பெற வேண்டிய ஏலப் பிணை வைப்புத்தொகைகள் | | | | 266,414.24 | 222,209.12 |
| திறைசேரி அங்கீகரிக்கப்பட்ட முன்பணக் கணக்கு | | | | 442,332,557.08 | 385,167,075.47 |
| | | | | 1,159,199,283.00 | 1,024,861,951.91 |
| மொத்த சொத்துகள் | | | | **1,559,311,181.63** | **1,418,101,259.37** |
| பொறுப்புகள் | | | | | |
| நடப்பு பொறுப்புகள் | | | | | |
| பெறப்பட்ட முன்பணம் | 11 | | | 90,081,185.72 | 44,806,180.19 |
| செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி (VAT) | | | | 396,481,026.64 | 369,769,322.83 |
| சேர்க்கப்பட்ட செலவுகள் | 12 | | | 380,814.97 | 890,402.28 |
| பெற வேண்டியவர்களிடமிருந்து கிடைத்த அதிகப்படியான வருமானம் | | | | 14,031,641.37 | 13,738,660.50 |
| செலுத்த வேண்டிய ஏலப் பிணை வைப்புத்தொகைகள் | | | | 2,912,126.92 | 2,912,126.92 |
| ஒதுக்கீட்டு பயன்பாட்டுக் கணக்கு | | | | 35,000,000.00 | 2,000,000.00 |
| மொத்த பொறுப்புகள் | | | | **538,886,795.62** | **434,116,692.72** |
| நிகர சொத்துகள் | | | | **1,020,424,386.01** | **983,984,566.65** |

**அரசாங்க தொழிற்சாலை – கொலன்னாவ**

**வேலை நிறைவேற்றல் முன்பணக் கணக்கு – 2025**

**2025 டிசம்பர் 31 நிலைப்பட்ட நிதிப் பொருளாதார நிலை அறிக்கை**

| | குறிப்பு | | | 2025 ரூ. | 2024 ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | | நிகர மதிப்பு | நிகர மதிப்பு |
| நிகர சொத்துகள் / பங்குரிமை | | | | | |
| வாக்கெடுப்பின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | | | | 444,014,643.51 | 437,142,052.34 |
| மதிப்பிழப்பு ஒதுக்கீட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | | | | 1,682,923.97 | 1,682,923.97 |
| திரட்டப்பட்ட இலாபம் | | | | 292,883,594.90 | 271,302,800.01 |
| திரட்டப்பட்ட மதிப்பிழப்பு | | | | 281,843,223.63 | 273,856,790.32 |
| மொத்த நிகர சொத்துகள் / பங்குரிமை | | | | **1,020,424,386.01** | **983,984,566.64** |

| | | |
|---|---|---|
| ……………………………… | ……………………………………… | ………………………………………… |
| W.H.C.Himali | Eng A. Wijesinghe | eng.L.B.Kumudu lal |
| பிரதம கணக்காளர் | பணிப்பாளர் நாயகம் | செயலாளர் |
| திகதி | திகதி | திகதி |

## அரசாங்க தொழிற்சாலை – கொலன்னாவ

## வேலை நிறைவேற்றல் முன்பணக் கணக்கு – 2025

## STATEMENT OF CHANGES IN NET ASSETS / EQUITY FOR THE YEAR ENDED 31 DECEMBER 2025

| | ஒதுக்கீட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | தேய்மான ஒதுக்கீட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | திரட்டப்பட்ட இலாபம் / நட்டம் | திரட்டப்பட்ட தேய்மானம் | மொத்த நிகர சொத்துகள் / மூலதனம் |
|---|---|---|---|---|---|
| | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. |
| 01-01-2024 அன்று நிலுவையிலுள்ள இருப்பு | 428,594,598.64 | 1,682,923.97 | 278,039,875.01 | 273,856,790.32 | 982,174,187.94 |
| 2024 ஆம் ஆண்டில் சொத்துகள் கொள்வனவு | 8,547,453.70 | | | | 8,547,453.70 |
| 2024 ஆம் ஆண்டில் சொத்துகள் அகற்றல் | | | | | – |
| 2024 ஆம் ஆண்டிற்கான நிகர சொத்துகள் / மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றம் | | | | | – |
| ஆண்டிற்கான இலாபம் | | | 13,179,271.24 | | 13,179,271.24 |
| முந்தைய ஆண்டுக்கான சரிசெய்தல் | | | (19,916,346.24) | | (19,916,346.24) |
| 31-12-2024 அன்று நிலுவையிலுள்ள இருப்பு | **437,142,052.34** | **1,682,923.97** | **271,302,800.01** | **273,856,790.32** | **983,984,566.64** |
| | | | | **547,713,580.64** | |
| 2025 ஆம் ஆண்டில் சொத்துகள் கொள்வனவு | 6,872,591.17 | - | | | 6,872,591.17 |
| முந்தைய ஆண்டுக்கான சரிசெய்தல் | | - | 725,944.86 | | 725,944.86 |
| ஆண்டிற்கான தேய்மானம் | | | | 7,986,433.31 | 7,986,433.31 |
| ஆண்டிற்கான இலாபம் | | | 20,854,850.03 | | 20,854,850.03 |
| 31-12-2025 அன்று நிலுவையிலுள்ள இருப்பு | **444,014,643.51** | **1,682,923.97** | **292,883,594.90** | **273,856,790.32** | **1,020,424,386.01** |

| அரசாங்க தொழிற்சாலை – கொலன்னாவ | | |
|---|---|---|
| வேலை நிறைவேற்றல் முன்பணக் கணக்கு – 2025 | | |
| 31 டிசம்பர் 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான பணப் பாய்ச்சல் அறிக்கை | | |
| | **2025** | **2024** |
| | **ரூ.** | **ரூ.** |
| இயக்க நடவடிக்கைகளிலிருந்து பெறப்படும் பணப் பாய்ச்சல்கள் | | |
| வரிக்கு முன்பான நிகர இலாபம் | **20,854,850.03** | **13,179,271.24** |
| பின்வருவனவற்றிற்கான சரிசெய்தல்கள் :- | | |
| முந்தைய ஆண்டுக்கான சரிசெய்தல் | 725,944.86 | (19,916,346.24) |
| ஏனைய வருமானம் | (795,372.27) | (101,278.82) |
| தேய்மானம் | 7,986,433.31 | 8,433,675.18 |
| செயல்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்பான இயக்க இலாபம் | **28,771,855.93** | 1,595,321.36 |
| இயக்கச் சொத்துகளில் அதிகரிப்பு / (குறைவு) | | |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய தொகைகள் | 104,770,102.90 | 60,395,202.21 |
| சரக்குக் கையிருப்புகள் | (32,655,010.83) | 43,665,039.36 |
| வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய தொகைகள் | (44,516,838.66) | (23,157,735.62) |
| இயக்க நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கும் நிகர பணப் பாய்ச்சல் | **56,370,109.34** | **82,497,827.31** |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பணப் பாய்ச்சல் | | |
| ஏனைய வருமானம் | 795,372.27 | 101,278.82 |
| நிலையான சொத்துகள் கொள்வனவு | (6,872,591.17) | (8,547,453.70) |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து பணப் பாய்ச்சல் | | |
| ஒதுக்கீட்டு நிதியிலிருந்து பெறப்பட்ட நிதி ஒதுக்கீடு | 6,872,591.17 | 8,547,453.70 |
| பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவற்றில் நிகர அதிகரிப்பு | **57,165,481.61** | **82,599,106.13** |
| ஆரம்ப கருவூல அங்கீகரிக்கப்பட்ட முன்பணம் கணக்கு | 385,167,075.47 | 302,567,969.34 |
| 31/12/2025 அன்று முடிவடைந்த கருவூல அங்கீகரிக்கப்பட்ட முன்பணம் கணக்கு | **442,332,557.08** | **385,167,075.47** |

3.2**ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் பயன்பாடு செயல்திறன் ரூ. 000**

| **ஒதுக்கீட்டின் வகை** | **ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள்** | | **உண்மையான செலவு** | **பயன்படுத்த ஒதுக்கீடு முடிந்தது இறுதி ஒதுக்கீடு தொகை % ஆக** |
|---|---|---|---|---|
| | **அசல் ஏற்பாடு** | **இறுதிப் போட்டி ஏற்பாடு** | | |
| மீள்செலுத்துகை | 216,000 | 214,500 | 198,044 | 92.32% |
| மூலதனம் | 74,000 | 75,500 | 65,188 | 86.34% |

**3.3 நன்கொடைகள் மற்றும் பிற ரசீதுகள் மீதான செயல்திறன்**

| **நன்கொடை அளிக்கப்பட்ட நிறுவனம்** | **நன்கொடையின் நோக்கம்** | **நன்கொடைத் தொகை** |
|---|---|---|
| இல்லை | இல்லை | இல்லை |

**3.4 நிதி சாராத சொத்துக்கள் செயல்திறனைப் புகாரளிக்கின்றன ரூ. 000**

| **சொத்துக்கள் குறியீடு** | **குறியீட்டு விளக்கம்** | 31.12.2025 **தேதியிட்ட சொத்துக்கள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி இருப்பு** | **நிதி நிலை அறிக்கையின்படி** 31.12.2025 **நிலவரப்படி இருப்பு** | **எதிர்காலத்தில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்** | **முன்னேற்றத்தை % ஆகப் புகாரளித்தல்** |
|---|---|---|---|---|---|
| 9151 - | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | எஸ் அட்டவணை சொத்து கணக்கெடுப்பின் கீழ் மேற்கண்ட பொருட்களில் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடு. கிடைக்காததால், சரக்கு கணக்கெடுப்பு அறிக்கையின்படி நிலுவைகளை வழங்க முடியாது. | 408,971 | 2025 ஆம் ஆண்டிற்கான பண்டக ஆய்வு அறிக்கைக்கும் நிதி நிலை அறிக்கைக்கும் இடையே ஒப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. | 100% |
| 9152 - | இயந்திரங்கள் வாகனங்கள் | | 365,980<br>72,379 | | |
| 9153 - | எல் மற்றும் | | 240,000 | | |
| 9160 - | விஜபி | | - | | |

## 3.5 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை
## தேசிய கணக்காய்வு அலுவலகம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை
# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. சீஏஈ/ஏ/ஜிஎவ்/எவ்எஸ்/02/2025/05 திகதி : 2026 மே மாதம் 29 ஆம் திகதி

பணிப்பாளர் நாயகம்,

அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்.

**தலைப்பு 310 - அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் 2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பிலான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

1. **நிதிக் கூற்றுக்கள்**

   **1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 310 - அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கன நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளையின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவுக்கு அமைய அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்ற இந்த நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவுக்கு அமைய சமர்ப்பிக்கப்பட வேண்டிய

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் பந்தி 1.6 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியுள்ளதாக அமைந்துள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். குறித்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 ஒரு விடயத்தை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதன் அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதன் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்பு 1 தொடர்பாக கவனத்தைக் கோர விரும்புகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரச நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 டிசம்பர் 17 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டல் தொகுப்பு இலக்கம் 02/2025 இற்கமைய அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியின் தேவைகளுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு உகந்ததாக இருக்காதிருக்க முடியும். எனது அறிக்கை அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம், திறைசேரி மற்றும் இலங்கைப் பாராளுமன்றத்தின் உபயோகத்தினை மாத்திரம் நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பிலான எனது அபிப்பிராயம் நீக்கப்படுவதில்லை.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு அலுவலரினதும், கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்புக்கள்

அரச நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 டிசம்பர் 17 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டல் தொகுப்பு இலக்கம் 02/2025 அரச கணக்குகள் வழிகாட்டல் தொகுப்பு இலக்கம் 06/2024 இற்கமைய நிதிக் கூற்றுக்களை தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானம் செய்வது கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திணைக்களத்தினால் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணிவரப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வச் சட்டத்தின் 38(1)(இ) உட்பிரிவுக்கு அமைய திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கு விளைதிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பை தயார் செய்து பேணிவருவதை கணக்கீட்டு அலுவலர் உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பில் காலத்திற்குக் காலம் மீளாய்வை மேற்கொண்டு அதற்கமைய கட்டமைப்பை விளைதிறன்மிக்கவாறு பேணிவரத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது

கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதம உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கணக்கீட்டு அலுவலரை அறிவுறுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக் கூற்றுகள் பற்றிய கருத்துரை

### 1.6.1 முற்பணங்களைச் செலுத்தல்

### (அ) களஞ்சிய முற்பணக் கணக்கு

i. நி.பி. 501 இற்கமைய களஞ்சிய முற்பணக் கணக்கு பேணிவரப்படுவது இலாபம் உழைக்கும் நோக்கத்துடனோ அல்லது நட்டத்தை எதிர்பார்த்தோ அல்ல என்பதுடன், பொருட்கள் கொண்டு வரப்படுகின்ற விலைக்கு பொருட்களின் இருப்பு கணிப்பீடு செய்யப்படுகின்றது. அவற்றை கொள்வனவு செய்ய, களஞ்சியப்படுத்த மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான செலவினத்தை உள்ளடக்கியதாக செலவினத்திற்கு 10 சதவீதம் சேர்க்கப்பட்டு இருப்பு விநியோகிக்கப்படுவதாக 2025 களஞ்சிய முற்பணக் கணக்கின் முகவுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆண்டின் விநியோகங்களில், விநியோக செலவினம் ரூபா 65,264,395 ஆன தொகை மற்றும் ரூபா 16,959,887 ஆன ஊழியர் செலவினம் மற்றும் விநியோக செலவினம் குறைக்கப்பட்ட பின்னர் ரூபா 6,480,780 ஆன மிகை கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

ii. களஞ்சிய முற்பணக் கணக்கில் ரூபா 6,480,780 ஆன இலாபம், மேற்கொண்ட வேலைகள் முற்பணக் கணக்கில் சீராக்கல் செய்யும் போது எரிபொருள் மற்றும் எழுதுகருவி போன்ற உற்பத்தி நடவடிக்கைகளுக்கு நேரடியாக தொடர்புபடுாத விடயங்கள் தொடர்பான செலவினங்களும் ஒதுக்கப்படாது நேரடி பொருட்கள் செலவினத்தின் கீழேயே சீராக்கல் செய்யப்பட்டு உற்பத்திச் செலவினம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

iii. மீளாய்வு ஆண்டில் பெறுகை மற்றும் வழங்கல் கணக்கில் செலவினத்தை விஞ்சிய விநியோக நிலுவையான ரூபா 6,480,780 ஆன பெறுமதி ஐந்தொகையில் ரூபா 6,762,410 ஆக ரூபா 281,630 இனால் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

### (ஆ) செய்த வேலைகளுக்கான முற்பணக் கணக்கு

i. மீளாய்வு ஆண்டுக்கு உத்தேச செயற்படு நட்டமாக ரூபா 35,000,000 ஆன தொகை 1701 ‘‘நட்டம் மற்றும் பதிவழிப்புச் செய்தல்’’ எனும் செலவுத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ள போதும், மேற்படி ஆண்டின் இறுதியில் செய்த வேலைகளுக்கான முற்பணக் கணக்கிலிருந்து ரூபா 20,854,850 ஆன இலாபம் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது ரூபா 55,854,850 இற்கு மேற்பட்ட தொகையான பாரிய வித்தியாசமாக உள்ளதனால் செயற்படு நட்டத்தை மதிப்பீடு செய்யும் போது சரியான முறையியல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. செலவுத் தலைப்பு 1701 விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு காலாண்டு அடிப்படையில் இலாப நட்டக் கணக்குகள் தயார் செய்யப்பட்டிருக்காமை, போதியளவிலான சான்றுகள், கணக்கிடும் அடிப்படை மற்றும் அங்கீகாரங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக மேற்படி செலவின ஏற்பாடுகள் உண்மையாகவும், நியாயமாகவும் உறுதி செய்யப்படவில்லை.

ii. செய்த வேலைகள் முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 4 இற்கமைய கருத்திட்டமொன்றுக்கு செய்யப்பட்ட உண்மையான செலவினம், மேற்படி ஆண்டில் புரள்வாக இனங்காண்பதாக வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், உண்மையான செலவினத்தை விஞ்சிய புரள்வு இனங்காணப்பட்டுள்ளமை மாதிரிப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய 11 கருத்திட்டங்களின் உண்மையான செலவினம் ரூபா 30,830,230 மிகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

iii. 2025 ஆம் ஆண்டு கடன்பட்டோர் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த 06 கருத்திட்டங்கள் தொடர்பான ரூபா 14,088,763 ஆன கடன்பட்டோர் மீதி, மீளாய்வு ஆண்டு தொடர்பான கருத்திட்டச் செலவினப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

iv. ரூபா 13,179,271 ஆன முன்னைய ஆண்டின் இலாபம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கும் போது திட்டிய இலாபத்திலிருந்து நீக்குவதற்குப் பதிலாக நிருவாகச் செலவினத்தின் கீழ் செலவினமாக பதிவு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வு ஆண்டில் செலவினம் அத்தொகையினால் அதிகரித்து இலாபம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

v. சொத்துக்களாக கணக்குகளில் பதிவு செய்யப்படவேண்டிய ரூபா 1,840,111 ஆன கேள்வி வைப்புப் பெறுமதி செலவினமொன்றாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டதனால் அப்பெறுமதியினால் மீளாய்வு ஆண்டின் செலத்துக்கள் பெறுமதி குறைந்துள்ளதுடன், செலவினம் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

vi. கேள்வி வைப்புக்களின் பெறுகையாக கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டிய ரூபா 85,000 ஆன கேள்வி காலம் முதிர்ச்சியடைந்த பெறுமதி வருமானம் பெறுகையாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

vii. வாடிக்கையாளர் ஒருவரிடம் 2019 ஆண்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த ரூபா 104,190 ஆன தடுத்துவைத்தல் தொகை மீளச் செலுத்துவது நிருவாக செலவினத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டதனால் மேற்படி தொகை மூலம் செலவினம் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

viii. உற்பத்திச் செயன்முறையில் நேரடியாக தொடர்புபடாத நிருவாகச் செலவினமான கேள்வி வைப்புச் செலவினம் ரூபா 1,840,111 ஆன தொகை மற்றும் பயன்படுத்தாத இரும்புகளை அகற்றல் செலவினமான ரூபா 17,364 ஆன தொகை உற்பத்திச் செலவினத்தில் உட்புகுத்தப்பட்டுள்ளதனால் உற்பத்திச் செலவினம் அதிகமாகவும், மொத்த இலாபம் குறைவாகவும் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ix. முன்னைய காலப்பகுதியின் தவறுகளை சீராக்கல் செய்வதற்காக முன்னைய ஆண்டின் சீராக்கல்களின் கீழ் ரூபா 725,945 ஆன தொகை திரட்டிய இலாபத்திற்கு சீராக்கல் செய்யப்பட்ட போதிலும், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 54 ஆம் பிரிவுக்கமைய அது பற்றிய எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

x. 2024 டிசம்பர் மாதமளவில் செய்த வேலைகள் கணக்கிற்குக் கிடைத்த செலவுத் தலைப்புப் பெறுகை ரூபா 198,009 மீளாய்வு ஆண்டின் சனவரி மாதம் மாற்றப்பட்டிருந்ததுடன், குறித்த பெறுமதி மீளாய்வு ஆண்டின் உற்பத்திச் செலவினத்தில் உட்புகுத்தப்பட்டுள்ளது.

xi. திணைக்களத்தின் செலவுத் தலைப்புப் பெறுகையாக வங்கிக் கணக்கிற்கு 2025 டிசம்பர் 15 மற்றும் 29 ஆம் ஆகிய திகதிகளில் கிடைத்திருந்த 02 காசோலைகளின் கூட்டுத்தொகை ரூபா 5,989,592 மீளாய்வு ஆண்டு செலவுத் தலைப்புப் பெறுகையாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

xii. 2025 நவம்பர் 13 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்தின் வங்கிக் கணக்கிற்கு வேறு ஒரு வங்கிக் கணக்கிலிருந்து செலவுத் தலைப்புப் பெறுகைக்கு ரூபா 1,518,578 ஆன காசோலை விநியோகிக்கப்பட்டுள்ள போதிலும், 2026 சனவரி 31 ஆம் திகதி வரையும் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காசோலை மீளாய்வு ஆண்டின் செலவுத் தலைப்புப் பெறுகையாக உற்பத்திச் செலவினத்திற்கு சீராக்கல் செய்யப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

xiii. திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள நீர் வழங்கல் சபையின் 2214 ஆம் இலக்க கருத்திட்டத்திற்கு செயலாற்றுகை பிணையாக திணைக்கள வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 6,303,721 ஆன தொகை திணைக்களத்தின் சொத்தாக காட்டுவதற்குப் பதிலாக நிருவாக செலவினமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

xiv. இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 86 பந்திக்கமைய ஆதனம், பொறி, உபகரணம் தொடர்பாக பயன்வாய்ந்த ஆயட்காலம், தேய்வு விகிதம், கொள்வனவு, அகற்றல் மற்றும் திரட்டிய தேய்வை வெளிப்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவ்வாறு போதியளவில் வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை.

xv. நிலையான சொத்துக்களுக்கு மீளாய்வு ஆண்டுக்காக கணிப்பீடு செய்யப்பட்ட ரூபா 7,986,433 ஆன வருடாந்த தேய்வுப் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் அவ்வவ் சொத்துக்களின் திரட்டிய தேய்வுப் பெறுமதியுடன் சேர்க்கப்பட்டு சொத்துக்களின் செலவினத்திலிருந்து குறைத்து நிதி நிலைமைக் கூற்றில் தேறிய பெறுமதியை வெளிப்படுத்த வேண்டுமாயினும், அவ்வாறு செய்யாமை காரணமாக சொத்துக்களின் தேறிய பெறுமதி சரியாக காட்டப்படவில்லை. மேலும், தவறுதலாக உரிமையாண்மை மாற்றக் கூற்றில் ரூபா 281,843,223 ஆன திரட்டிய தேய்வு ஒதுக்கம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

xvi. பேரேட்டுக் குறிப்பு 117 இல் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 338,532 ஆன தளபாடம் கொள்வனவு, மோட்டார் வாகனச் செலவினத்திற்கும், அதன் திரட்டிய தேய்வு தளபாடம் திரட்டிய தேய்வுப் பெறுமதிக்கும் இசைவாக சீராக்கல் செய்யப்பட்டமை காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தளபாடம் மற்றும் வாகனத்தின் பெறுமதி சரியானதல்ல என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது.

xvii. 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு அமைய 2008 மற்றும் 2009 ஆண்டுகளில் காணப்பட்ட ரூபா ரூபா 36,941,553 ஆன கடன்பட்டோர் நிலுவையின் கூட்டுத்தொகையில் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் குழு அறிக்கைக்கு அமைய ரூபா. 4,045,992 ஆன கடன் நிலைவையை பதிவழிப்புச் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் 2008, 2009 ஆண்டுகள் தொடர்பில் மேற்படி ரூபா 36,941,553 ஆன மொத்த நிலுவையும் பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

**1.6.2 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாமை**

தேய்மான திரட்டிய நிதியமான ரூபா 1,682,924 தொடர்பான விரிவான அட்டவணை மற்றும் ரூபா 608,966,406 ஆன கடன்பட்டோர் நிலுவைக்கான மீதிகள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.3 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவராமை**

அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தினால் பின்வரும் ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

| **ஆவண வகை** | **ஏற்புடைய ஒழுங்குவிதி** | **அவதானிப்பு** |
|---|---|---|
| இழப்பு நட்டம் பற்றிய பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடுகள் | இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| பொறுப்புக்களின் பதிவேடு | நிதிப் பிரமாணம் 445 இன் ஏற்பாடுகள் | -மேலே- |
| இருப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 751 இன் ஏற்பாடுகள் | -மேலே- |
| செலவினப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 447 இன் ஏற்பாடுகள் | -மேலே- |
| பொது வைப்புப் பேரேடு | நிதிப் பிரமாணம் 565(1) இன் ஏற்பாடுகள் | -மேலே- |

**2. வேறு சட்டரீதியான தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவுக்கு அமைய பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்குகின்றன என்பது மற்றும்

(ஆ) கடந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது பின்வரும் சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கடந்த ஆண்டின் மேற்படி அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** | **அமுல்படுத்தப்படாதுள்ள சிபாரிசு** | **இந்த அறிக்கையின் பந்திக்குரிய தொடர்பு** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1.6.3 (ஏ) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு அமைய 2008 மற்றும் 2009 ஆண்டுகளில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 36,941,553 ஆயினும் பதிவழிப்புச் செய்ய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தைக் கொண்ட குழு அறிக்கைக்கு அமைய மேற்படி கடன்பட்டோர் கூட்டுத்தொகை ரூபா 4,045,992 ஆகும். அவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களில் 2008, 2009 ஆண்டுக்கான மேலே குறிப்பிடப்பட்ட ரூபா 36,941,553 ஆன மொத்த மீதியும் பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது. | 1.6.1 (ஆ)(xvii) |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

(அ) மதிப்பீடுகளைத் தயார் செய்யும் போது முறையான கற்கை மற்றும் திட்டமிடல் இன்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை காரணமாக செலவுத் தலைப்பு 01 இல் 98 சதவீதமும், செலவுத் தலைப்புக்கள் 04 இல் 40 சதவீதம் முதல் 53 சதவீதம் வரை இடைப்பட்டதாக ஏற்பாடுகள் எஞ்சியிருந்தன.

(ஆ) 05 செலவுத் தலைபுக்கள் தொடர்பாக வருடாந்த வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ளமை தொட்பாக குறிப்பிடப்பட்டிருந்த காரணங்கள் சரியானதல்ல என்பதனால் ஏற்றுக்கொள்ளும் நிலைமையில் இருக்கவில்லை.

### 3..2 வரையறைகளை விஞ்சுதல்

2025 டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகரித்திருந்த 2025 டிசம்பர் 03 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 25/2476/827/006 மற்றும் 25/2373/827/002 மூலம் திருத்தியவாறான செய்த வேலைகள் முற்பணக் கணக்கில் மற்றும் களஞ்சிய முற்பணக் கணக்கில் பெறுகைகளின் குறைந்தபட்ச வரையறைகள் முறையே ரூபா 325,000,000 மற்றும் ரூபா 60,000,000 ஆயினும், ஏசீஏ – 05 மாதிரியமைப்பில் முறையே ரூபா 450,000,000 மற்றும்

ரூபா 120,000,000 ஆக திருத்தம் செய்ய முன்னரான ஒதுக்கீட்டுச் சட்டம் மூம் அங்கீகரிக்கப்பட்ட தொகைகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

### 3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை செய்துகொள்ளல்

(அ) நிதிக் கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் பொறுப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை எனினும், ரூபா 4,408,366 ஆன பெறுமதியைக் கொண்டதாக மீளாய்வு ஆண்டின் இறுதியில் பொறுப்புக்கள் செய்துகொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் 94(1) இற்கமைய வருடாந்த மதிப்பீடுகளில் ஏற்பாடுகள் இருந்தாலேயொழிய எந்தவொரு திணைக்களமும் வேலை அல்லது சேவை அல்லது வழங்கலுக்கான எந்தவொரு செலவினம் அல்லது கடப்பாட்டையும் செய்துகொள்ளக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ள போதும், முறையாக ஆராயாது மற்றும் திட்டமிடாது மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டதன் காரணமாக 05 செலவுத் தலைப்புக்களில் மதிப்பீட்டு ஏற்பாடுகளை விஞ்சியதாக ரூபா 1,630,993 ஆன பொறுப்புக்கள் செய்துகொள்ளப்பட்டுள்ளன.

### 3.4 கணக்கீட்டு அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடுக்காக விளைதிறன்மிக்க உள்ளகக் கணக்காய்வு முறைமையை தயார் செய்து பேணிவரப்படுகின்றது என்று பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி முறைமையின் விளைதிறன்மிக்க தன்மை பற்றி காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து அதற்கமைய முறைமையை விளைதிறன்மிக்கவாறு பேணிவரத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும், மேற்படி மீளாய்வுகளை எழுத்து மூலம் செய்து அதன் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமாயினும், அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாமை

நிகழ்தகவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு | | ஒவ்வாமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| | xix ஆம் பந்தியின் 6.4 ஆம் பந்தி | சங்ஹிந்த செவண தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தில் 60 வீடுகளைக் கொண்ட 06 மாடிகளைப் பரிசோதித்த போது வீடுகள் மூடப்பட்டிருந்ததன் காரணமாக 33 வீடுகள் பரிசோதிக்கப்படவில்லை என்பதுடன், பரிசோதிக்கப்பட்ட 27 வீடுகளில் 06 வீடுகள் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு பரிசோதனைச் சபை அறிக்கையிட்டுள்ளது. வீடுகளை உப வாடகைக்கு விடுதல், நிதி செலுத்தி தங்கியிருக்கும் வெளியாட்கள், வேறு ஆட்களை வைத்திருப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக உரிய ஒழுங்குவிதிகள் குறிப்பிடப்பட்டுள்ள போதும் வீடுகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த அலுவலர்களின் அலுவலர்கள் மூன்று பேர் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை வீடுகளில் வசிப்பதிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் | |
| (i) | நிதி ஒழுங்குவிதிகள் 504(1) | திணைக்களத்தினால் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வர்த்தகக் கடன்பட்டோர், கடன் கொடுத்தோர், முடிவுப் பொருட்கள், மூலப் பொருட்கள், களஞ்சியப் பொருட்கள் மற்றும் வழங்கல், முற்பணக் கணக்குக்கு உரிய வரையறைகள் பற்றிய கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதி சகிதம் பிரதம கணக்கீட்டு அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப் பிரமாண இலக்கம் 756(6) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பொது 47 இன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு 2024 இன் அகற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | திறைசேரி செயலாளரின் MF/CG/02/(iv) ஆம் இலக்க 2017.06.28 ஆம் திகதியைக் கொண்டதாக வெளியிடப்பட்ட 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | சொத்துக்கள் மற்றும் செலவின முகாமைத்துவத்துக்காக அரசின் சகல நிதியல்லாத சொத்துக்களையும் ஆவணமயப்படுத்துவதன் கீழ் கொம்பட்ரோலர் ஜெனரலுக்கு அனுப்ப வேண்டிய நிதியல்லாத சொத்துக்களான கட்டிடங்கள், இயந்திரசாதனங்களின் தகவல்களை சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

**4.1.1 நோக்கு மற்றும் செயற்பணி**

இயந்திரப் பொறியியல்சார் பணிகளை நிறைவேற்றுவதற்காக ‘ஏ’ தரத்தைச் சேர்ந்த அரச திணைக்களமொன்றாக 1971 சனவரி 10 ஆம் திகதி அரச தொழில்சாலைகள் திணைக்களம் தாபிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நிலைபேறான அபிவிருத்தியின் ஊடாக எதிர்கால இலங்கைப் பொறியியல் துறையில், உற்பத்தி, சேவைகள் மற்றும் பயிற்சியை வழங்கும் மிகச் சிறந்த அரச நிறுவனமாதல் ஆகும். திணைக்களத்தின் பணிகள் உற்பத்தித்துறை, நிர்மாணத்துறை (கனரக உருக்கி ஒட்டுதல்), புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புத் துறை மற்றும் இயந்திரப் பொறியியல் மதியுரைச் சேவைகள் ஆகிய 04 துறைகளிலும் இதன் செயற்பணி பரந்துள்ளது.

**4.1.2 கருத்திட்டங்களை நிறைவேற்றாமை**

(அ) சுகாதார அமைச்சின் இரண்டாம் மாடியின் கூரையை திருத்துதல்

சுகசிறிபாயவில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின் இரண்டாம் இரண்டாம் மாடியின் கூரையை திருத்தும் போது கூரையில் மிகவும் அபாயகரமான இடங்களை அகற்றி சேதமடைந்துள்ள பகுதிகளை நீக்கி புதுப்பித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றும் இது இணங்கிய வேலைகளில் சுமார் 25 சதவீதமாகும் என்றும் குறிப்பிட்டு 2024 நவம்பர் மாதம் 28 ஆம் திகதி

வரை மேற்கொள்ளப்பட்ட வேலைப் பகுதிகள் தொடர்பாக ரூபா 3,780,162 ஆன விலைப் பட்டியலை திணைக்களம் சமர்ப்பித்திருந்தது. பெறுகை வழிகாட்டல் தொகுப்புக்கு அமைய 20 சதவீதமான முற்பணம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ள போதிலும் அவ்வாறு பெற்றுக் கொள்ளாது திணைக்களத்தின் நிதியைப் பயன்படுத்தி கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. கூரையை புதுப்பிக்கும் போது பெய்த மழை காரணமாக ஏற்பட்ட இழப்புத் தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழு மேற்கொண்ட நி.பி. 104 விசாரணைக்கமைய ரூபா 1,716,375 ஆன இழப்பு இடம்பெற்றுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டது. இதில் ரூபா 429,275 ஆன தொகை சிவிலின் புதுப்பிதலை மேற்கொள்வதற்காக குறைக்கப்பட்டு எஞ்சிய ரூபா 1,287,100 ஆன ஏற்பட்ட நட்டத்திற்காக திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து குறைக்கப்பட்டு ரூபா 2,115,021 ஆன தொகை மாத்திரம் 2025 டிசம்பர் 29 ஆம் திகதி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டின் இறுதி வரையும் மேற்படி நட்டம் தொடர்பில் பொறுப்புவாய்ந்த தரப்பினர்களை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், குறித்த நட்டத்தை கணக்குகளில் பதிவு செய்திருக்கவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

(ஆ) நிலக் கீழ் மின்சார கம்பிக் கட்டமைப்பை நிர்மாணிக்கும் கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தை அமுல்படுத்த முன்னர் சாத்தியக்கூறுக் கற்கையை மேற்கொண்டு தேவையான சீராக்கல்களை இனங்கண்டு திட்டங்கள் தயார் செய்யப்படாமை காரணமாக கருத்திட்டத்தை அமுல்படுத்தும் போது அதற்காக தயார் செய்யப்பட்ட ரூபா 23,858,572 ஆன மதிப்பீட்டில் உள்ளடங்கும் ரூபா 8,425,000 பெறுமதிமிக்க (35 சதவீதமான) வேலைகளின் பகுதியை நிறைவேற்றுவது அவசியமற்றது என்று பின்னர் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்ஜ என்பதுடன், மொத்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாதிருந்து, பின்னர் இனங்காணப்பட்ட ரூபா 2,236,800 பெறுமதிமிக்க அத்தியாவசியமான வேலை விடயங்கள் விசேட பட்டியல்படுத்தப்பட்ட விலை விகிதங்களின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாக கேள்வி விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது விலைகள் போட்டிக்கு உட்படுத்தப்பட்டு நன்மையான நிலைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளதுடன், கனிய அளவைகளில் 35 சதவீதமான அநாவசியமான வேலைகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை காரணமாக அரசாங்க பெறுகை செயன்முறையின் அடிப்படைக் கோட்பாடு மீறப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க தொழில்சாலையின் உள்ளக வீதிக் கட்டமைப்பை எஸ்போல்ட் கொன்க்றீட் இட்டு நிர்மாணிப்பதை பரிசோதித்தல்.

ஒப்பந்தப் பெறுமதி ரூபா 7,560,525 இற்கு 2021 யூலை 05 ஆம் திகதி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட இக்கருத்திட்டத்திற்கு கட்டாய பதவியணி அலுவலர்களான எஸ்போல்ட் கொன்க்றீட் வீதி நிர்மாணிக்கும் அனுபவத்தைக் கொண்ட பொறியியலாளர் ஒருவர் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் இருப்பதாக விலைமனு ஆவணத்தில் சமர்ப்பித்திருக்காமை காரணமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நிராகரித்திருந்த மேற்படி விலைமனுதாரர் பின்னர்

அது தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதாக கூறி எழுத்துமூலம் கோரிக்கை சமர்ப்பித்ததை அடுத்து, மேற்படி அலுவலர்களை வழங்குவதாக விருப்பத்தைப் பெற்றுக் கொண்டதன் அடிப்படையில், மீண்டும் குறித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 2006 அரச பெறுகை வழிகாட்டல் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிக்க வெளிப்படைத்தன்மையுடன் நடவடிக்கை மேற்கொள்ளல், நியாயத்தன்மை, விலைமனுதாரர்களுக்கு சமமான வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணாக ஒப்பந்தாரர் தெரிவு இடம்பெற்றுள்ளது.

வீதியை நிர்மாணிக்க அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திடம் பெற்றுக் கொண்ட ரூபா 7,707,210 ஆன ஒப்பந்தத்தின் கீழ் மண் அகழ்வு மற்றும் ஏபீசீ நிரப்பும் அளவு மற்றும் கனமீற்றர் 300 முதல் 538.25 வரை அதிகரிக்கும் போது ஒட்டுமொத்த வித்தியாசம் 19 சதவீதம் காணப்பட்ட போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுக்கமைய 10 சதவீதத்திற்கு மேற்பட்ட குறித்த வித்தியாசத்திற்கு அமைச்சின் அங்கீகாரம் இன்றி 2021 டிசம்பர் 31 ஆம் திகதி கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், 473 மீற்றர் அளவான வீதியில் 20 மீற்றர் இடைவெளியில் குழாய் பொருத்துவதற்காக பயன்படுத்த வேண்டியது 23 குழாய்களாயினும், ரூபா 1,300,000 செலவிட்டு 25 குழாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், பின்னர் மேற்படி மதிப்பீட்டையும் விஞ்சியதாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அல்லது பெறுகைக் குழுவின் எந்தவொரு அங்கீகாரமும் இன்றி மேலதிக வேலைகளின் கீழ் 9 குழாய்களை பொருத்துவதற்காக ரூபா 468,000 ஆன மேலதிக தொகை செலுத்தப்பட்டுள்ளது.

நிறுவன வளவில் பிரதான நீர் வழங்கல் குழாயை அகற்றுவதற்கான ரூபா 120,000 ஆன செலவினம் ஆரம்ப மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காமை காரணமாக இதனை மேலதிக வேலைகளின் கீழ் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதுடன், 473 மீற்றர் நீளமான 4 மீற்றர் அகலமான வீதியை நிர்மாணிக்க ஒப்பந்ததாரருக்கு மொத்தமாக கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ள போதிலும், மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வீதியில் 12 இடங்கள் 3.70 – 3.95 மீற்றர்களுக்கு இடைப்பட்டதாக குறைந்த அகலத்தைக் கொண்டிருந்ததனால் சாதாரண அகலம் 3.836 மீற்றர் வரை குறைந்திருந்ததுடன், வகைப்படுத்தல்களுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நிர்மாணிப்பு நிலைமை காரணமாக கருத்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்பட்ட போக்குவரத்து நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதில் தடை ஏற்பட்டிருந்தது.

### 4.1.3 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதன் தாமதம்

தபால் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவுக்கு தற்காலிகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனம் சமர்ப்பித்திருந்த ரூ. 104,412,899 ஆன மதிப்பீட்டுக்கு தபால் திணைக்களம் இணக்கம் தெரிவித்து 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ. 3,795,000 ஆன தொகையை செலுத்தியுள்ளது. அவ்வாறாயினும் மேற்படி

நிர்மாணிப்புக்கு உத்தேசிக்கப்பட்ட காணியின் மண் பொருத்தமற்றது என்று 2019 சனவரி 13 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போது உறுதி செய்யப்பட்டதன் காரணமாக புதிதாக தயார் செய்யப்பட்ட திட்டத்திற்கு அமைய வேறொரு இடத்தில் நிர்மாணிக்கவெனக் குறிப்பிட்டு மேலும் ரூ. 10,710,572 ஆன தொகை 2019 மார்ச் மாதம் 14 ஆம் திகதி மற்றும் ரூபா 7,694,000 ஆன தொகை 2020 மார்ச் 06 ஆம் திகதியுமாக கூட்டுத்தொகை ரூபா 22,199,572 ஆன தொகை இத்திணைக்களத்திற்கு தபால் திணைக்களத்திடமிருந்து அறவிட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கருத்திட்டத்தின் முன்னேற்றம் சுமார் 10 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. 06 வருடங்கள் கடந்துள்ள போதிலும் கருத்திட்டத்தை நிறைவு செய்ய அல்லது பெற்றுக் கொண்ட நிதியை திருப்பிச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.1.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உட் பிரிவுக்கு அமைய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை நிதி ஆண்டு நிறைவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடல் வேண்டும் என்பதுடன், 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிகள் சுற்றறிக்கையின் 10(02) பந்திக்கு அமைய அரச நிதிகள் திணைக்களம் வெளியிட்டுள்ள வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியமைப்புக்கு அமைய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயார் செய்யப்பட்டு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(02) பிரிவுக்கு அமைய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சொத்து முகாமைத்துவம்

(அ) அரசாங்க தொழில்சாலையில் உற்பத்தி செய்யும் பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக தொழில்சாலைக் கட்டிடத்தின் முன்பக்கமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 265 சதுர மீற்றர் அளவான காட்சியறை அதற்காகப் பயன்படுத்திக் கொள்ளாது நீண்டகாலமாக மூடப்பட்டிருந்தது.

(ஆ) தொழில்சாலை வளவில் அமைந்துள்ள பழைய சிற்றுண்டிச்சாலைக் கட்டிடத்தை புதுப்பித்து இரவு நேர ஓழியர் ஓய்வறையாக பயன்படுத்த முகாமைத்துவம் சிபாரிசு செய்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டு புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக கூரை அகற்றப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் 2026 சனவரி 16 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கட்டிடத்தின் சுவர்கள் மழையில் நனைந்து சேதமடைந்து வருவது அவதானிப்புச் செய்யப்பட்டது.

(இ) திணைக்களத்திற்கு உரித்தான ரூபா 4,500,000 பெறுமதிமிக்க 03 வாகனங்கள் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு முதல் சேதமடைந்த நிலையில் காணப்பட்டதுடன், புதுப்பித்து பயன்படுத்திக் கொள்வதற்கு அல்லது அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறுமதி ரூபா 2,297,400 ஆன 16 இயந்திரசாதன விடயங்கள் சுமார் 08 வருட காலமாக பயன்படுத்தப்படாது காணப்படுவதுடன், இவற்றில் ரூபா 738,400 பெறுமதியான 5 இயந்திரசாதனங்கள் சிறிய புதுப்பித்தல்களின் பின்னர் பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்ற போதிலும், மேற்படி புதுப்பித்தல்கள் அல்லது தேவையானவாறு மற்றைய இயந்தரசாதனத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 அரச அலுவலர்களின் பிணை வைப்பு

நி.பி. இலக்கம் 880 இன் ஏற்பாடுகளுக்கு அமைய அரச நிதி, வருமானம் முத்திரை அல்லது பொருட்களை பொறுப்பேற்றுக் கொள்ளல் அல்லது பொறுப்பாக இருத்தல் அலல்து அரச நிதியை விநியோகிக்கும் அல்லது முத்திரை அல்லது பொருட்களை விநியோகித்தல் தொடர்பாக நிருவாக ரீதியாக பொறுப்புக்கூற வேண்டிய அல்லது தத்துவமளிக்கப்பட்டதன் கீழ் அந்நடவடிக்கைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அலுவலர்களும், அரசாங்க கணக்குகள் தொடர்பான உறுதிச்சீட்டுக்களை சான்றுப்படுத்தும் காசோலைகளில் கையொப்பமிடுகின்றவர்களும் தமது கடமையை நேர்மையாக நிறைவேற்றுவதாக 612 ஆம் அத்தியாயமான அரச அலுவலர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய பிணைகளை வைத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், மேலதிகப் பணிப்பாளர் நாயகம், உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்), உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்), பிரதம பொறியியலாளர், பொறியியலாளர், பிரதம கணக்காளர், கணக்காளர், களஞ்சியக் காப்பாளர் மற்றும் சாரதிகள் பிணைகளை வைத்திருக்கவில்லை.

### 4.4 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

செலவுத் தலைப்பு இலக்கம் 1701 இன் கீழான நட்டம் மற்றும் பதிவழிப்புச் செலவினமாக ரூபா 165,055 செலுத்தப்பட்டுள்ள போதிலும், நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (1) – நட்டம் மற்றும் பதிவழிப்புச் செய்தல் பற்றிய கூற்றில் இது உட்புகுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) அரசாங்க தொழில்சாலையில் காணப்பட்ட பழைய கணினி மென்பொருள் முறைமையின் குறைபாடுகள் காரணமாக முறையற்ற வகையில் அமுலில் இருந்த இருப்புக் கட்டுப்பாடு, இருப்புக் கட்டளை அனுப்பல், கொள்வனவு, மதிப்பீடுகளை தயார் செய்தல் போன்ற

நடவடிக்கைகளை முறையாக அமுல்படுத்துவதில் காணப்பட்ட முறைமையை மேம்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டு விலை மனுக்கள் கோரப்பட்டு, தனியார் நிறுவனமொன்றிடம் ரூபா 2,954,700 இற்கு 2021 டிசம்பர் 31 ஆம் திகதி செலுத்தப்பட்டுள்ளது. கணினி மென்பொருள் முறைமை மூலம் மீள் கட்டளை அனுப்பும் நிலையில் களஞ்சிய கட்டளை தன்னியக்க அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் வசதி உள்ள போதிலும், அதற்குப் பதிலாக கைஎழுத்துமூலம் எழுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட களஞ்சியக் கட்டளைகள், கொள்வனவுப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள ஒரு அலுவலரிடம் 16 வருடங்களுக்கும் மேற்பட்ட காலகமாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 142,650 ஆன கடன் நிலுவை மற்றும் பதவி வெறிதாக்கிச் சென்ற அலுவலர்கள் 13 பேரிட் 1-20 வருட காலமாக அறவிடப்படாதுள்ள ரூபா 959,588 ஆன நிலுவைகளை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்கள தனி நிலுவை வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 49,208,850 மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 49,370,190 ஆக இருந்தமை காரணமாக ரூபா 161,340 அன வித்தியாசம் காணப்பட்டது. இந்த வித்தியாசத்தை இனங்கண்டு காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஓய்வு பெற்ற அலுவலர்கள் 17 பேரிடமிரந்து ரூபா 2,185,384 மீளாய்வு ஆண்டின் இறுதிவரை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், இதில் கூட்டுத்தொகை ரூபா 420,905 ஆன தற்போது சேவையில் உள்ள அலுவலர்கள் 04 பேரின் நிலுவைக் கடன் தொகை 20 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக அறவிட வேண்டியுள்ள போதிலும், மீளாய்வு ஆண்டின் இறுதி வரையும் அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

நிலைபேறான அபிவிருத்தி பற்றிய ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சிநிரலுக்கு அமைய ஒவ்வொரு அரச நிறுவனமும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், மீளாய்வு ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் சில இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவற்றுக்குரிய சுட்டிகளை குறிப்பாக இனங்காண்பதற்கு மற்றும் அமுல்படுத்துவதற்கு திணைக்களம் தவறியுள்ளது.

## 6. மனிதவள முகாமைத்துவம்

### 6.1 இணைப்புச் செய்யப்பட்டுள்ள பதவியணி மற்றும் உண்மையான பதவியணி

2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பதவியணியில் வெற்றிடமாகக் காணப்பட்ட 510 பதவி வெற்றிடங்களை நிரப்ப அல்லது தேவைகளுக்கமைய பதவிகளின் எண்ணிக்கையை திருத்தம் செய்வத்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை என்பதுடன், மேற்படி வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த பதவிகளான பிரதம பொறியியலாளர் பதவிகள் 05 உம், பிரதி / உதவிப் பணிப்பாளர், இயந்திரப் பொறியியலாளர், மின் பொறியியலாளர், சிவில் பொறியியலாளர் மற்றும் சட்ட அலுவலர் ஆகிய பதவிகள் மற்றும் மூன்றாம் நிலை மட்டத்திலான பதவியொன்றான பிரதம திட்டமிடல் கலைஞர் பதவி 2016 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி முதல் அதாவது பதவி அங்கீகரிக்கப்பட்ட திகதி முதலே வெற்றிடமாகக் காணப்படுவது, திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் நேரடியான விளைவை ஏற்படுத்தியிருந்தது.

**கையொப்பம் / வீ.டீ. சீதா**

பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக.

## 04 ஆம் அத்தியாயம் - செயலாற்றுகைச் சுட்டி

### 4.1 திணைக்களத்தின் செயலாற்றுகைச் சுட்டி (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

| விசேட சுட்டி | உத்தேச முடிவுகளின் விகிதமாக (%)உண்மை முடிவு | | |
|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| மேற்கொண்ட வேலைகளின் முற்பணம் | | | √ |
| மூலதனச் செலவினம் | | | √ |

## 05 ஆம் அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை

### 5.1 இனங்காணப்பட்ட குறித்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| இலக்கு / நோக்கம் | இலக்கு | வெற்றிச் சுட்டி | இதுவரை வெற்றி பெற்றதன் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| SDG 4 - தரமான கல்வி (தொழில்வாய்ப்புக்குத் தேவையான தெரில்நுட்ப மற்றும் தொழில் தேர்ச்சியுள்ள ஆட்களை உருவாக்குதல்) | 100% | • வருடாந்தம் பயிலுனர்கள் 30 பேரை பயிற்றுவித்தல் | | | √ |
| SDG 8 – சிறந்த தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி (கைத்தொழில் விளைதிறனை மேம்படுத்தல்) | 100% | • உற்பத்தியின் விளைதிறனை வளர்த்தல் (நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட இயந்திரசாதனங்களை கொள்வனவு செய்வதற்கு மூலதன ஏற்பாடுகள் ரூ.மி. 29 செலவிடப்பட்டமை) | | | √ |
| SDG 9 – கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் (பொறியியல் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்) | 100% | • ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மூலதன ஏற்பாடுகள் ரூ.மி. 2 ஐ செலவிடல் | | | √ |
| SDG 12 – பொறுப்புமிக்க நுகர்வு மற்றும் உற்பத்தி (மூலப்பொருள் விரயமாவதை குறைத்தல் மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்) | 100% | • 300 Kg உலோக கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் | | √ | |

### 5.2 நிறைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள்

- புத்தாக்கங்களுக்கு பேடன்ட் உரிமப் பெற்றுக் கொள்ளல்.
- லேசர் வேல்டின் இயந்திரம் போன்ற நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தியின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்.
- லேசர் வெட்டும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மூலப்பொருள் விரயமாவதைக் குறைத்தல்.

# 06 ஆம் அத்தியாயம் - மனித வளத் தோற்றப்பாடு

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

| மட்டம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடம் / (மிகை) |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 31 | 20 | 11 |
| மூன்றாம் நிலை | 10 | 01 | 09 |
| இரண்டாம் நிலை | 296 | 104 | 192 |
| ஆரம்ப | 445 | 147 | 298 |
| **மொத்தம்** | **782** | **272** | **510** |

## 6.2 நிறுவன செயல்திறனில் மனித வளங்களின் பற்றாக்குறை/ மேலதிக தாக்கம்

- அனுமதிக்கப்பட்ட முதன்மை தர ஊழியர்களின் எண்ணிக்கை 445 ஆக இருப்பதுடன் 298 வெற்றிபவ்கள் நிரப்பப்படாமல் உள்ளன.
- நிறைவேற்று மற்றும் இரண்டாம் நிலைத் தரங்களைச் சேர்ந்த அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்கள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அவ்வவ் பணிகளின் வினைத்திறனில் தாக்கம் ஏற்பட்டுள்ளது.
- ஒரே தடவையில் பல கருத்திட்டங்களில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்ற போது பதவியணிப் பற்றாக்குறை காரணமாக பெரும் தாக்கம் ஏற்படுகின்றது.
- தற்போது காணப்படுகின்ற உற்பத்திப் பணிகளுக்கு மற்றும் ஆரம்பத் தரங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கு சம்பளம் மற்றும் ஊதியம் செலுத்தப்படுவது திணைக்களம் மேற்கொண்ட வேலைகளின் முற்பணக் கணக்கின் மூலமாகும் என்பதனால் மேற்படி நிதிப் பலத்தையும் கவனத்தில் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற.

**6.3 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்பு வழங்கிய முறை 2025**

| இல | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூபா) | பயிற்சி வகை (உள்நாடு, வெளிநாடு) | பயிற்சியின் பின் பெற்ற அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | தொழில் பாதுகாப்பு | 113 | 01 நாள் | 0.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 2. | உலோகஉற்பத்தி - I | 96 | 01 நாள் | 0.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 3. | உலோகஉற்பத்தி – II | 101 | 01 நாள் | 0.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 4. | வாகனம் பராமரிப்பு | 95 | 01 நாள் | 0.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 5. | வேல்டின் பற்றிய ஒரு நாள் செயலமர்வு | 02 | 01 நாள் | 0.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 6. | Information Session on JICA Training on KCCP / Short Term & Long Term Programmers | 02 | 01 | 0.00 | உள்நாடு | திருப்திகரமானது |

2025 ஆண்டுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கென ரூ.மி. 2 ஆன ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் 310-2-1-0-2401 இன் கீழ் 2025 ஆண்டில் பின்வருமாறு ஏற்பாடுகளான ரூ.மி. 2.0 இல் 80% ஆன தொகை செலவிடப்பட்டது.

| இல | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூபா) | பயிற்சி வகை (உள்நாடு, வெளிநாடு) | பயிற்சியின் பின் பெற்ற அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 01. | பெறுகை செயன்முறை பற்றிய சான்றிதழ் பாடநெறி | 1 | 10 நாள் | 30,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 02. | சிவில் ஓய்வூதியம் கணிப்பீடு செய்தல் மற்றும் செலுத்துவது பற்றிய பயிற்சி | 1 | 02 நாள் | 13,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 03. | கடிதம் கோப்பிடல், கடமைசார் கடிதங்களை தயார் செய்தல் பற்றிய ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 27 | 01 நாள் | 65,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04. | சாரதி மற்றும் அலுவலக சிற்றூழியர்களுக்கான ஒழுக்கம் மற்றும் அலுவலக நடவடிக்கைமுறை | 1 | 02 நாள் | 13,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 05. | Public Procurement Procedures & Practices | 2 | 01 நாள் | 54,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 06. | Public Procurement Procedures & Practices | 2 | 01 நாள் | 38,400.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 07. | Advanced Corrosion Protection Techniques: Hot dip Galvanizing & Beyond | 4 | 01 நாள் | 60,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 08. | இழப்பு, நட்டம் பற்றிய நி.பி. 104 இன் கீழான விசாரணை | 1 | 01 நாள் | 6,500.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 09. | லீவு அலுவலரின் கடமை மற்றும் பொறுப்பு | 3 | 01 நாள் | 19,500.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 10. | In-House Awareness Programme on ISO 9001:2015 Standard Requirements 01 Day | 30 | 01 நாள் | 121,025.52 | உள்நாடு | திருப்திகரமானது |
| 11. | Process mapping and simulation modeling | 02 | 04 நாள் | 128,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 12. | Introduction to Artificial Intelligence | 01 | 40 மணித்தியாலம் | 41,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 13. | அலுவலக முறை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 03 | 01 நாள் | 36,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 14. | விஞ்ஞான ரீதியாக சிக்கனமான முறையில் வாகனம் ஓட்டுதல் | 01 | 01 நாள் | 6,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 15. | Electrical safety and regulation Group 01 | 06 | 04 நாள் | 252,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 16. | Electrical safety and regulation Group 02 | 06 | 04 நாள் | 252,000.00 | உள்நாடு | திருப்திகரமானது |
| 17. | அலுவலக குறிப்பு எழுதுதுதல் மற்றும் கடமைசார் கடிதம் | 03 | 01 நாள் | 19,500.00 | உள்நாடு | திருப்திகரமானது |

07 ஆம் அத்தியாயம்

**இயைபு அறிக்கை**

| இலக்கம் | ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு | இயைபு நிலைமை (ஏற்புடையதாகின்றது /ஏற்புடையதாவதில்லை) | ஏற்புடையதாவதில்லை எனின் அதற்கான சுருக்கமான விளக்கம் | ஏற்புடையதாகாமையை எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்காக பிரேரிக்கும் சரியான தீர்மானம் நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 1 | **கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | ஏற்புடையதாகின்றது | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு | ஏற்புடையதாகின்றது | | |
| 1.3 | தொழில் மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு) | ஏற்புடையதாகின்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | ஏற்புடையதாகின்றது | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | - | | |
| 1.6 | வேறு | - | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவருதல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிருவாக சுற்றறிக்கை 267/2018 இற்கமைய நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.2 | ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேடு / ஆட்களின் சம்பள அட்டைகளை பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்களுக்கான பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.5 | சகல மாதாந்த கணக்குப் பொழிப்பு அறிக்கைகளையும் தயார் செய்து பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.9 | நட்டம் இழப்பு பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.10 | பொறுப்புகள் பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.11 | உபஆவணப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் (புயு-ே20) | ஏற்புடையதாகின்றது | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகள் பகிரப்பட்டிருத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 3.2 | நிதி அதிகாரத்தை பொறுப்பளிப்பது பற்றி நிறுவனத்திற்குள் விழிப்புணர்வூட்டியிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் அலுவலர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் ஊடாக அங்கீகரிக்கப்படக் கூடியவாறு அதிகாரம் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பள ஆவண மென்பொருள் பொதி (பெகேஜ்) யை பயன்படுத்தும் போது கணக்காளரின் நிருவாகத்திற்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4 | **வருடாந்த திட்டங்களைத் தயார் செய்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்றிட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயார் செய்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திடம் உரிய திகதியில் சமர்ப்பித்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.5 | வருடாந்த காசோட்டக் கூற்றை உரிய திகதியில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 5 | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதியில், சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) னுஆயு.ஃ.1-2019 இற்கமைய, ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 6.2 | ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலப்பகுதிக்குள் விடையளித்திருத்தல் | ஏற்புடையதாவதில்லை | கொவிட் தொற்று நிலைமை காரணமாக ஏனைய காரணங்கள் | கட்டுப்படுத்த முடியாத காரணங்கள் தவிர ஏனைய தாமதங்கள் தொடர்பில் உரிய தரப்பினர்களை விழிப்புணர்வூட்டல் |
| 6.3 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உட்பிரிவுக்கு அமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 6.4 | நிதிப் பிரமாணம் 134(3) இற்கமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | னுஆயு சுற்றறிக்கை 1-2019 இற்கமைய, ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 உரிய ஆண்டில் நடாத்தியிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 8 | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 8.2 | மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைப்புக்கு பொருத்தமான ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை நியமனம் செய்து மேற்படி அலுவலர் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.3 | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இற்கமைய பொருட் கணிப்பீட்டை நடாத்தி குறித்த அறிக்கைகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 8.4 | வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறை மற்றும் வேறு சிபாரிசுகளை சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொண்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 8.5 | சேதமடைந்த பொருட்களை அகற்றுவதை நி.பி. 772 இற்கமைய மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கு நாளாந்த பயணக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயார் செய்து உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.2 | வாகனங்கள் சேதமடைந்து 6 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றியிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.3 | வாகன லொக் புத்தகங்களைப் பேணிவருவதுடன் அவற்றை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் நி.பி. 103,104,109, மற்றும் 110 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பற்றி மீள் பரிசீலனை செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.6 | லீசின் கொள்வனவுக் கால எல்லையின் பின்னர், லீசின் கொள்வனவு வாகனங்கள் லொக் புத்தகங்களில் முழு உரித்தையும் சாட்டுதல் செய்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 10 | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயார் செய்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10.2 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்பட்டுள்ள செயற்படாத வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தல் | ஏற்புடையதாவதில்லை | | |
| 10.3 | வங்கி இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற மற்றும் சீராக்கல் செய்ய வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி நிலுவைகளை ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்த்திருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 11 | **ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை தாண்டாதவாறு செலவிடல் | ஏற்புடையதாகின்றது | | |
| 11.2 | நி.பி. 94(1) இற்கமைய செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் பயன்படுத்திய பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஏற்பாடுகளை வரையறைகளைத் தாண்டாதவாறு பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு ஏற்புடையதாதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 12.2 | நிலுவையாக உள்ள கடன் நிலுவைகள் பற்றிய காலப் பகுப்பாய்வை மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக காணப்பட்டு வருகின்ற நிலுவையாக உள்ள கடன் நிலுவைகளைத் தீர்த்திருத்தல் | ஏற்புடையதாவதில்லை | | 2020 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் மீதிகளை பரிசோதித்து அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பூர்த்தியடைந்த வைப்புக்கள் தொடர்பில் நி.பி. 571 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 14 | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 14.2 | நி.பி. 371 இற்கமைய வழங்கப்பட்ட குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி, மேற்படி பணி நிறைவு செய்யப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தீர்க்கப்பட்டிருத்தல். | | | |
| 14.3 | நி.பி. 371 இற்கமைய அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளைத் தாண்டாதவாறு குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 14.4 | கட்டுநிதிக் கணக்கின் மீதி, திறைசேரியின் பதிவேடுகளுடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல். | ஏற்புடையதாகின்றது | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | குறித்த ஒழுங்குவிதிகளுக்கு அமைய சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளச் செலுத்தல்கள் செலுத்தப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 15.2 | சேகரிக்கப்பட்ட வருமானங்கள், வைப்புக் கணக்கில் செலவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு செலவு வைத்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 15.3 | நி.பி. 176 இற்கமைய நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 16 | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வரையறைக்குள் பதவியணியை பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 16.2 | பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 16.3 | 20.09.2017 ஆம் திகதிய ஆளுனு சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இற்கமைய சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 17 | **பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலர் ஒருவரை நியமனம் செய்து தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல். | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இணையத்தளம் அல்லது மாற்றுவழிமுறைகள் ஊடாக நிறுவனம் பற்றி பொது மக்களின் பாராட்டுக்கள் / பிரேரணைகளை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 17.3 | தகவல் அறியும் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு அமைய ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவை அல்லது ஒரு வருடத்தில் ஒரு தடவை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 18 | **பிரசைகள் பிரகடனத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | 05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2008(1) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள் / சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்து அமுல்படுத்தியிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 18.2 | மேற்படி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு அமைய, பிரசைகள் /சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல், மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தினால் முறையியல் ஒன்று தயார் செய்யப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 19 | **மனிதவள திட்டத்தை தயார் செய்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 இன் மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் மனிதவளத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளமை | ஏற்புடையதாகின்றது | | |
| 19.2 | பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருடத்திற்கு ஆகக் | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறைந்தது 12 மணி நேரத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்பை மேற்படி மனிதவளத் திட்டத்தில் உறுதி செய்திருத்தல் | | | |
| 19.3 | மேலுள்ள சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 19.4 | மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு அமைய மனிதவள அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ள சிரேʻட அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 20 | **கணக்காய்வு பந்திகள் தொடர்பில் பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்** | | | |
| 20.1 | கடந்த ஆண்டுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீராக்கல் செய்யப்பட்டுள்ளமை. | ஏற்புடையதாகின்றது | | |